
பதிவு எண் 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று





| | | |
|---|---|---|
| | | ரூ. அ. |
| வருடசந்தா ... | ... ... | 3—0 |
| 6 மாத சந்தா ... | ... ... | 1-12 |

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

| | | |
|---|---|---|
| | | ரூ. அ. |
| வெளி நாட்டிற்கு சந்தா | ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு | ... | 0—8 |

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஷு ஆடி-மீ 10-உ (25—7—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 13.



## உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சாக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால் அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

### சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள். பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்தகதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-ஷு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்து கொள்ளலாம்.

மதராஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதராஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில். கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

## தூய்மை பெற்ற திருமணம்.

### "புரோகிதரல்லாத விவாகம்."

"வட ஆற்காடு ஜில்லாவிலே ஆம்பூரில் ஸ்ரீமான்கள் மாசிலாமணி முதலியார், முருகேச முதலியார், பத்மநாப முதலியார் இம்மூவரும் மூன்று விவாகங்களை ஒரே பந்தலில் நடத்தினர். இவ்விவாகங்களின் விசேஷமென்னவெனில், இவைகள் பார்ப்பனர்கள் வந்து மந்திரம் ஓதி நடைபெறாமல், பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே எல்லாம் தமிழிலேயே நடத்தப்பட்டன. இவைகள் முடிவுற்ற பின்பு, பூதூர் இராமகிருஷ்ண மிஷின் தலைவரும், வாணியம்பாடி முனிசிபல் அங்கத்தினருமாகிய ஸ்ரீமான் சி. வெங்கடசாமி நாயுடு என்பார், முற்காலத்தில் ரிஷிகள் விவாகங்கள் நடத்தியவண்ணம் இவ்விவாகம் நடந்திருப்பதன் விசேஷத்தை எடுத்துரைத்தார்", என்று "சுகோதயம்" பத்திரிகை 15-7-26-ம் தேதி எழுதியுள்ளது. இவ்விவாகத்திற்கு நம்மை அழைத்திருந்ததைப் பற்றியும் திருமணம் நடக்கப்போகு முறையினைப் பற்றியும் முன்னர் தெரிவித்திருந்தோம். அதோடு திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரையே புரோகிதராக வந்து திருமண விழாவை நடத்தித் தரவேண்டுமெனக் கோரியிருந்தார்கள். திரு. நாயக்கர் அந்நாளில் இருமூன்று இடங்கட்கு வருவதாக முன்னரே ஒப்புக்கொண்டு விட்டமையால் ஆம்பூர் திருமண விழாவிற்குப் போயிருந்து நடத்திவைக்க இயலாது போயிற்று.

இங்கு "சுகோதயம்" பத்திரிகை "புரோகிதரல்லாத விவாகம்" என்று குறிப்பிட்டிருப்பதன் பொருள் நமக்கு விளங்கவில்லை. "புரோகிதர்" என்றால் என்ன, அது யார் என்பது "சுகோதய"த்திற்கு உதயமாகவில்லை போலும். "புரோகிதர்" என்னும் வார்த்தை, பார்ப்பன வகுப்பிற் பிறந்து பஞ்சாங்க நூலைக் கையிலெடுத்துத் திரியும் பார்ப்பனரையே குறிப்பிடுமென்று "சுகோதயம்" பொருள் கொள்ளுகிற தென்பதாகவே, "புரோகிதரல்லாத" என்ற வார்த்தையை அது எடுத்தாண்டிருந்து தெரிகிறது. "சுகோதயம்" இவ்விடத்தில் தவறிழைத்து விட்டதென்றே கூறுவோம். புரோகிதன் என்பது வடமொழி. எவனொருவன் சுபாசுப காரியங்களை நடத்திவைக்கின்றானோ அவனையே புரோகிதன் என்பது. தமிழில் ஆசிரியர் என்பர். அத்திருமணத்தை "பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே எல்லாம் தமிழிலேயே நடத்தப்பட்டன" என்று எழுதியுள்ள "சுகோதயத்திற்கு அத்திருமணத்தை நடத்தியோர் புரோகிதராகத் தெரியவில்லை போலும்.


# மதனகேசரி

இணையற்ற மகா தாதுபுஷ்டி லேகியம்

இது அபார சக்தி வாய்ந்தது. தேகம் வலுக்கும். மூளை, இருதயம், குண்டிக்காய்களுக்கு வலுவேற்றும் நரம்பு ஸ்தானங்களைப் பலப்படுத்தும். அபரிமிதமான தாது விருத்தி, இரத்த விருத்தி, போகசக்தி உண்டாக்கும். தாது புஷ்டிக்கு நிகரற்ற மகா உயர்ந்த சாலாமிசிரி சஞ்சீவி இதுவே.

1 டின் ரூ. 3. வி. பி. அணா 5.

இராஜானுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்

ரோஜா முத்தையா

கணக்கில்லா நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது.

# அயன் மஹா மூலிகை சந்தனாதி தைலம்.

சிரசைப் பற்றிய நோய்களுக்கு தேவாமிர்தம் போன்றது.

உஷ்ணமான வேலைக்காரர்களுக்கும் உஷ்ணதிரேகி, மாணாக்கர், வக்கீல், ஜட்ஜுகள் முதலியோர் பலரும் உபயோகித்து வருகின்றனர்.

பரிமள மணமும் சிறந்த குண முடையது. பத்தியமில்லை.

கண்ணெரிவு, கண் சிகப்பு, கண் கூச்சம், கண்ணில் நீர் வடிதல், பார்வைக் குறைவு, பித்த மயக்கம், பயித்தியம், ஞாபகக் குறைவு, அஸ்திகாங்கை, மூலச்சூடு, நீர் எரிவு, நீர்க்கடுப்பு, தாகம், நித்திரை பங்கம், பூச்சி வெட்டு, வழுக்கை, மண்டைக் குத்தல், ஒருத்தலைவலி, தலைச்சொறி, காதுவலி, காதுகுத்தல், மயிர்ப் பிளவு, மயிர் உதிர்தல், செம்பட்டை, ஆரம்ப நரை, தேகநாற்றம் முதலிய வியாதிகளைப் போக்கி உரோமத்தை கருக்கச் செய்யும் திறமை வாய்ந்த தைலம் இது ஒன்றே.




12-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 1-8-0

24-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3-0-0

வாரம் இருமுறை எண்ணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக உபயோகிப்பதுடன் அனுதினமும் தலைவாரிக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| 40 வகை பித்தந்தீர்க்கும் ஜீரக ரசாயனம் 2-சேர் | ரூ. 2—0—0 |
| இரத்த விருத்திக்கு வீரிய தாது லேகியம் 1-சேர் | ரூ. 2—0—0 |
| பாலர் ரக்ஷணி நான்கு வகை மாத்திரை 200-க்கு | ரூ. 2—0—0 |
| சுக பேதி மாத்திரை அல்லது இரா பேதி 100 மாத்திரை | ரூ. 1—0—0 |
| சுக பேதி பவுடர் 100 வேளைக்கு | ரூ. 1—0—0 |
| ஓம சத்து அரை அவுன்ஸ் புட்டி 1-க்கு | ரூ. 1—0—0 |
| காலரா சஞ்சீவி திராவகம் 1-அவுன்ஸ் புட்டி 1க்கு | ரூ. 2—0—0 |
| காது நோய்க்கு கர்ண பிந்து 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு | ரூ. 1—0—0 |
| சோகை பாண்டுகளுக்கு அய காந்த சத்து 40 வேளைக்கு | ரூ. 1—0—0 |

குறிப்பு:— இன்னும் எல்லா வியாதிகளுக்கும் கை கண்ட மருந்துகள் நேரிலாவது தபால் மூலமாவது பெற்றுக் கொள்ளலாம். எனது தருமவைத்திய சாலையில் இவ் வருடம் 15000 வியாதியஸ்தர்களுக்கு மருந்து கொடுத்து சகல வியாதிகளையும் குணப்படுத்தி இருக்கிறேன். திருச்சியிலே பிரபல தன வந்தர்களின் குடும்பங்களுக்கு குடும்ப வைத்தியராக இருந்து வருகிறேன்.

டாக்டர். ஜி. எல். சாமி,
சத்திய வேத வைத்தியசாலை, வாகனேரி—திருச்சினாப்பள்ளி.

# ஆனந்த குணபோதினி

ஒரு நூதன உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை

பிரசித்த அநுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிறார்.

இத்தகைய நவீன ஸஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப்படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொருட்செல்வம் பெருகி இன்பம் ஓங்குதற்குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகிக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும், ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையையும் உண்டாக்கக் கூடியது. எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும் படியாயிருப்பது "ஆனந்த குணபோதினி"தான். ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், எவர் கையிலும் இப்பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" "பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய அலங்கார வசனமழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதை தங்களுடைய அநுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆனந்த குணபோதினியின் சொற்ப சந்தாவை உற்று நோக்குங்கள். வருஷச் சந்தா ரூபாய் ஒன்றே (ரூ-1) இன்றே எழுதுங்கள், உடனே சேருங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
புரோப்ரைட்டர், "ஆனந்த குணபோதினி" ஆபீஸ்,
302, தங்கசாலைவீதி, சென்னை.

# பார்ப்பனரல்லாதாரியக்கம்.

### அது செய்த நன்மைகள்.

## காங்கிரஸ் பத்திரிகையின் கருத்து.

### "கிருஷ்ணா பத்திரிகை" எழுதுவது.

"கிருஷ்ணாப் பத்திரிகை" என்பது மசூலிப் பட்டணத்திலிருந்து வெளியாகும் வைதிக ஒத்துழையாமைக் கொள்கை கொண்ட பத்திரிகையாகும். இதற்கு திரு. எம். கிருஷ்ணாராவ் அவர்கள் ஆசிரியராவார். இவர் பரந்த நோக்கமும் விசாலக் கருத்தும் கொண்ட ஓர் ஆந்திர பிராமணர். இவரைப் போன்று தைரிய மனம் படைத்தோர் ஆந்திர தேசத்தில் மிகச் சிலரே யிருப்பர். இத்தகைய சிறந்த தேச பக்தரை ஆசிரியராகக் கொண்ட 22-5-26-தேதி "கிருஷ்ணா பத்திரிகை"யில் "தேர்தல் யுத்தம்" என்ற தலைப்பின் கீழ் வெளியாகியுள்ள விஷயத்தில் சிறிது இங்கு கூறுவோம்:—

"பார்ப்பனரல்லாதாரியக்கத்தால் பழய காலத்து 'வழக்கம்'— 'கட்டளை'— என்னும் விஷயங்களெல்லாம் அடியோடு மாறிவிட்டன. விசேஷ உரிமை, மேலாதாயம், சர்வஸ்வதந்திரம் என்பவைகளெல்லாம் அடியோடு கவிழ்க்கப்பட்டன. இந்த பார்ப்பனரல்லாதாரியக்கம் ஏற்பட்டிராத பட்சத்தில் வக்கீல்களின் துரைத்தனமே ஏற்பட்டிருக்கும். இதனால் ஒவ்வொரு சபைக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்க வேண்டுமென்று ஏற்பட்டது.

"சட்ட சபையில் பார்ப்பன ஆதிக்கமேற்படுவதைத் தடுத்துள்ளது. இல்லாவிடில் அவைகட்குப் பந்துலுகளும், அய்யர்களும், ஐயங்கார்களுமே சென்றிருப்பார்கள். மற்றைய வகுப்பினர்களுக்கும் தன்னம்பிக்கை யேற்பட்டிராது. அரசியலில் உயர்வு பெற விழைவு மேற்பட்டிருக்காது.

"ஜஸ்டிஸ் கட்சி தோன்றியதிலிருந்து அரசியலில் பார்ப்பன ஆதிக்கம் குறைந்து போய் விட்டது என்பதை ஒப்புக் கொள்ளாதிருக்க முடியாது. அக்கட்சி தோன்றாதிருக்குமேல் சட்ட சபையில் பார்ப்பன அங்கத்தினர்களின் தொகை குறைந்திருக்காதென்பது வெள்ளிடைமலைபோல் காணக்கிடக்கின்றது. வகுப்புவாரிப் பிரதி நிதித்துவத்தில் சிறிது தீமைகளிருந்தபோதிலும் பொதுவாய் அவ் வகுப்புவாரிப் பிரதி நிதித்துவத்தினால்தான் பார்ப்பனர்கள் கட்டாயம் விலகவேண்டி நேர்ந்தது. இதற்கு முன்வரையிலும் உறங்கிக்கொண்டிருந்த வகுப்பினர் கண் விழித்தனர். நாம் உயரவேண்டுமென்னும் விழைவு எல்லா வகுப்புக்களினிடையு மிருக்கக் காணப் படுகின்றது. இனி இந்நாட்டிலுள்ள இரண்டுகட்சிகளின் சரித்திரத்தையும் எழுதப்புகும்போது, நாம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கே முதற்கண் இடம் கொடுக்கவேண்டி யிருக்கின்றது. ஜஸ்டிஸ்கட்சி தோன்றிய நாள்முதற்கொண்டு வகுப்பு வேற்றுமைகளும் சமூக வேற்றுமைகளும் அதிகமாகியுள்ளதென பார்ப்பனர்கள் நிந்தித்துப்பேசலாம். அவ்வேற்றுமைகள் சிறிது அதிகமாகியுள்ள தென்பது உண்மையே; ஒரு சமூகத்திற்கும் மற்றொரு சமூகத்திற்கும் வெறுப்பு ஏற்பட்டு வருவதும் உண்மையே. ஆனால் இவைகளெல்லாம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தினால் ஏற்பட்டுள்ளதெனக் கூறமுடியாது. பார்ப்பனரல்லாதாரியக்கம் தோன்றுவதற்குமுன் பார்ப்பனர்களில் பல பிரிவினர்கட்குள்ளும் விரோதங்களிருக்க வில்லையோ? அதுவேதான் இப்பொழுது பார்ப்பனரல்லாதார்கட்குள்ளும் நடைபெற்று வருகின்றது. உத்தியோகம் வேண்டுமென்று கேட்பவர்களின் தொகை பெருக்கமாயும், உத்தியோகம் கிடைப்பது குறைவாயு மிருப்பதினால், ஒரு வகுப்பினருக்கும் மற்றொரு வகுப்பினருக்கும் பலமான போட்டி யேற்பட்டது. வகுப்புக்களுக்குள் சச்சரவிருப்பதற்கு ஜஸ்டிஸ் கட்சியே பொறுப்பென்று நினைப்பது முற்றுந் தவறு.

"அது பார்ப்பனப்போட்டியாகி கத்தி முனையை மழுங்கச்செய்துள்ளது. அதனாலேதான் அதைப்பார்த்து பொறாமை கொள்ளப்படுகின்றது. ஆனால் நாட்டையும் அதன் மக்கட் தொகுதியையும் கவனிக்கும்போது ஜஸ்டிஸ்கட்சியைப் புகழவேண்டியதாயிருக்கின்றது. அது பலவீனர்களைப் பலவான்களாகச் செய்துள்ளது. இதுவரையிலும் தன்னம்பிக்கை இழந்திருந்தவர்கட்குத் தன்னம்பிக்கையை உண்டாக்கியுள்ளது. அது தூங்கிக்கொண்டிருந்தவர்களை விழிக்கச்செய்துள்ளது. இதுவரையிலும் அரசியல் விவகாரங்களில் அக்கறையில்லா திருந்தவர்கட்கு அரசியலில் ஆசையை உண்டாக்கியுள்ளது. ஆங்கிலம் கொஞ்சமுமறியாத ஒரு கிருஷிகரையும் கூட ஒரு தாலூக்கா போர்டு தலைவராக்குவது எது! பார்ப்பனர்தம் சூழ்ச்சியால் தேர்தலில் மூன்று முறைகள் முன் தோல்வி யடைந்த பார்ப்பனரல்லாத வக்கீலை மந்திரியாக்குவது எது? நியாயவாதியல்லாத ஒருவரை அல்லது ஒரு வியாபாரியை ஜில்லாபோர்டு தலைவராக்குவது எது? வேலையின்றி அந்தப்புரங்களிலே இருந்துகொண்டிருந்த ஜமீன்தாரர்களை பொதுவாழ்வில் இழுத்துவந்து பொது ஊழியங்களின் பொறுப்பைத் தாங்குமாறுசெய்தது எது? இவையெல்லாம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் வெற்றியே. பார்ப்பனரல்லாதாரியக்கத்தின் இவ்விரகசியத்தை அங்கீகரிக்காவிடில் தற்போதைய தேர்ந்தெடுப்பில் காணப்படும் பலமான போட்டியை உணர்ந்துகொள்ள முடியாது. இப்போட்டி சீர்திருத்தச் சட்டத்தின் பலனென்றும், பார்ப்பனரல்லாதாரியக்கத்திற்கும் இதற்கும் யாதொரு தொடர்புமில்லையென்றும் சிலர் கூறலாம். பார்ப்பனரல்லாதார் இயக்கமும் சீர் திருத்தச் சட்டமும் ஒரே சமயத்தில் தோன்றியதென்பதை மறுக்க முடியாது. பார்ப்பனரல்லாதார் இயக்கமே சீர் திருத்தச் சட்டம் வெற்றிபெற வேலை செய்ய உதவிபுரிந்ததென்பதையும் மறுக்க முடியாது. தன்னம்பிக்கையிழந்து அரசியல் விழைவில்லாதிருக்கும் மக்கட்கு ஓட்டுரிமை கொடுப்பதில் என்ன பயன்? இந்திய மக்கள் ஓட்டின் பெருமையை உணரும் ஆற்றலுடையவர்கள் தானா வென்று அதிகாரவர்க்கத்தினர்கள் கேட்டனர். பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் தோற்றமோ இச்சந்தேகத்தை நீக்கியது. பார்ப்பனரல்லாதார் இயக்கமேதான் ஓட்டர்களுக்குள் தங்களையே பெரிதாய் நினைத்துக் கொள்ளும்படிக்குச் செய்துள்ளது. மற்றைய மாகாணங்களில் நிலைமை எவ்வாறிருந்தபோதிலும் இம்மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் உண்டாக்கியுள்ள விழிப்பினால் தான் இப்பொழுது இவ்வளவு ஊக்கம் தேர்தலில் காணப்படுகின்றதென்னும் விஷயங்களை நடுநிலைமையிருந்து பார்க்கும் எவரும் தயங்காது ஒப்புக்கொள்வர்".

---

### ஒண்டிப்புதூர் மகாநாடு.

கோவை ஜில்லாவைச் சேர்ந்த ஒண்டிப்புதூர் ஸ்ரீராம கோஷ்டி நந்தவனத்தில் இம்மாதம் 17-ம் தேதி சனிக்கிழமை மாலை கிராம அபிவிருத்திக்காக ஓர் மகாநாடு கூடியது. மகாநாட்டுத் தலைவர் திரு. ராவ் பஹதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்களை ஊர்வலத்தோடு மகாநாடு கூடுமிடத்திற்கு அழைத்து வந்தனர். மகாநாட்டிற்கு திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி நாயக்கர், ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார், கிருஷ்ணசாமி பிள்ளை, மகாலிங்க ஐயர், நஞ்சுண்ட கவுண்டர், பீமைய செட்டியார், அருணாசலம் செட்டியார், சுப்பைய செட்டியார், பழனிசாமி நாயுடு, கணேச முதலியார் முதலியோர் வெளியூர்களிலிருந்து வந்திருந்தனர். பல பெண்மக்களும் மகாநாட்டில் குழுமி யிருந்தனர். தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் பல ஆடவரும் பெண்டிரும் வந்திருந்தனர். மகாநாடு சுமார் 1000 மக்களுக்கு மேல் உடையதாய் விளங்கியது. ஒண்டிப்புதூர் யூனியன் சேர்மென் தலைவருக்கு வரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுத்தார்.

திரு. ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் கிராம அபிவிருத்தியைப்பற்றி சுருக்கமாகப் பேசினார். திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் 'தற்கால நிலைமையில் நமது கடமை' என்பதைப் பொருளாகக் கொண்டு நீண்டநேரம் பேசினார். இவர் பேசிக்கொண்டு வரும்போது மத்தியில் ஒருவர் 'வரப்போகும் தேர்தலின்போது யாருக்கு ஓட்டு செய்வது' என்று கேட்டார். அதற்கு திரு. நாயக்கர் பதிலளிக்கும்போது சட்ட சபைக்குப் போவதால் அங்கு அரசியல் விஷயமாய் எதுவும் செய்ய முடியாதென்றும் சமூக சம்பந்தமாய் எதாவது நற்காப்பை நாடிக்கொள்வதற்குமட்டிலும் அது உபயோகப்படுமென்றும் இவ்வாறு சட்ட சபைக்காக ஓட்டுக் கேட்போருள் யாருக்கு ஓட்டு செய்வது என்று கேட்டால், தனித்த முறையில் இன்ன நபருக்கு ஓட்டுக் கொடுங்கள் என்றுசொல்ல முடியாது என்றும் உயர்ந்த ஜாதி என்ற அகம்பாவமின்றி, தாழ்த்தப்பட்டவரைத் தங்களோடு சமமாக நினைக்கக் கூடியவராயும் பார்ப்பனரல்லாதார் வகுப்பில் பிறந்தவராயும் கதரிடத்தில் உண்மை அன்பு உடையவராயும் உள்ளவர்களுக்கே ஓட்டுக்கொடுக்க வேண்டுமென்றும் கூறினர்.

# சாத்திரங்கள்.

சாத்திரங்கள் என்பதன் பொருள் என்னை என்பதைக்கூட இந்நாள் நமது நாட்டில் பலர் அறியவில்லை. ஆனால் சாத்திரங்கள் சாத்திரங்கள் என்ற பேச்சுக்குக் குறைவில்லை. எங்கு பார்த்தாலும் சாத்திரங்கள் என்று சாற்றப்படுகிறது. எல்லாவற்றிற்கும் சாத்திரங்கள் என இயம்பப்படுகிறது. சாத்திரங்கள் என்பவை எவை, அவை சாற்றுவன யாவை, என்பவற்றை ஆராய்வார் அரியர். சாத்திரங்கள் கூறும் உண்மைகளை உள்ளவாறுணரும் நல்லறிவு வாய்க்கப்பெற்றார் மிக அரியர். பரம்பரைப் பழக்கத்தால் எடுத்தவற்றிற்கெல்லாம் சாத்திரங்கள் சாத்திரங்கள் எனச் சொல்லித் தொலைக்கிறார்; நல்லவற்றிற்கும் சாத்திரங்கள் என்கிறார்; அல்லாதவற்றிற்கும் சாத்திரங்கள் என்கிறார் [illegible]று வ[illegible]பாரென்று எண்ணத்தக்காரு[illegible] [illegible]ங்கள் என்று சொல்லுகிறார். மற்றவரு[illegible] அப்பெயரைச் சொல்லாது விடுவரல்லர் [illegible]ன்றும் கல்லாப் பாமரரும் புத்தகங்களைக் கை[illegible]ல் எடுக்க அறியாப் பேதைப் பெண்ப[illegible]ங்கூடச் சாத்திரங்கள் என்று சாற்றப் பின்வாங்குவதில்லை.

எனவே சாத்திரங்களின் பொருளை யறியாமலேயே சாத்திரங்கள் என்ற சொல்லை நம்மவர் வாய்கள் நன்கு பயின்று விட்டன. சாத்திரங்கள் என்ற சொல்பவரைப் பார்த்து சாத்திரங்கள் என்றால் என்ன என்று கேட்பின், சாத்திரங்களின் பெயரைச் சொல்லுவோருள், விடையிறுக்க அறியாமல் விழிப்போர் பலருளர், என்பது நிரூபிக்கத் தக்கது. இதுகொண்டு சாத்திரங்கள் என்பதன் பொருளைச் சாத்திரங்கள் என்று சாற்றும் எல்லோருமே அறியவில்லை என்று நாம் கூறுவதாக எவரும் எண்ணற்க. அங்ஙனம் கூறுவோருள் அதன் பொருளறிந்தோருமுண்டு. சாத்திரங்கள் என்பதன் பொருள் எளிதில் அறிந்து கொள்ளக்கூடியதே. அதில் பெரிய சங்கடம் ஒன்றுமில்லை. சாத்திரங்கள் என்ற பதப்பொருளை அறிந்து சான்று காட்டுவோருள்ளும் சாத்திரங்களின் நீர்மை அறிந்தோர் பேரறிவு படைத்த ஒருசிலரே.

நம் இந்திய மக்கள் இந்நாள் எல்லாவற்றிற்கும் அடிமைப் பட்டுக் கிடப்பது போலவே சாத்திரங்கட்கும் அடிமைப்பட்டு விட்டார். சாத்திரங்கள் என்றால் என்னவோ பயங்கரமான பொருள்கள் என எண்ணி அஞ்சிச் சாகின்றார். இவர் அச்சத்தைத் துணைக்கொண்டு படிற்றொழுக்கம் பூண்டொழுகும் கதியில் மாக்கள், சாத்திரங்கள் என்ற பூச்சாண்டியைக் காட்டி இவரை மருட்டுகின்றார்.

சாத்திரங்கள் என்பதன் பொருளை மிக எளிதாக எல்லோரும் அறிந்து கொள்ளுமாறு உணர்த்துவோம். சாத்திரம் என்பது ஒருமை. அதன் பன்மை சாத்திரங்கள் என்பது. இது வடமொழியினின்றும் வந்த சொல். அதாவது வடமொழிச் சொல்லின் சிதைவு. சாஸ்திரம் என்ற வடசொல், தென் சொல்லில் சாத்திரம் என்று எடுத்தாளப்பட்டது. சாத்திரம் என்பது நூல் என்று பொருள்படும். இவ்வளவே. சாத்திரங்கள் என்றால் நூல்கள் என்பது பொருள்.

பொருளை ஓராது பிறமொழிச் சொல்லைப் புகலும் பொழுது அது ஆராய்ச்சிக்கு எட்டாத— அணுக முடியாத மிகப் பருப்பொருளாகத் தோன்றும். உணர்வு பெற்றால் எல்லாம் எளிதாகிவிடும். எல்லாவற்றையும் உலகம் எளிதில் உணருமாறு செய்யவேண்டுவது அறிஞர் பெருங்கடனன்றி ஒன்றையும் மக்கட்கு உணர்த்தாது பொதிந்து மூடிவைத்தல் அன்று. "அதை நீ படித்தலாகாது; இதை நீ படித்தல் ஆகாது" என்று அழுது தொலைத்தமையாலேயே மக்கள் அறியாமைப் படுகுழியில் வீழ்ந்தார். நாட்டில் மடமை மல்கியதற்கு மந்திரம் மந்திரம் என்று வழுத்திப் பொருளறியாமலே பிற மொழிகளை முண்டமாகப் புகன்று வந்ததே முதற்பெருங் காரணம்.

இந்திய நாட்டில் ஏறக்குறைய எல்லா மொழியாளரும் தங்கள் தாய் மொழிகளைக் கருவியாகக்கொண்டு நல்லறக் கடமை செய்யாமல், தாய்மொழிகளில் அவை ஆற்றுதல் தவறெனக்கொண்டு, தாங்கள் பொருளறியா ஒரு மொழிக்கு மதிப்பு வைத்து அம்மொழியிலுள்ள மிகச் சாதாரணமான பொருள்தரும் சொற்களையும் பிரயாதபாக்கி அம் மொழியிலிருந்து கூறப்படும் சில பொருள்கள் தேவலோகமென்று எங்கோ ஆகாயத்தில் தொங்கும் ஒரு அற்புத லோகத்திலிருந்து குதித்ததாக எண்ணுகின்றனர். அவை பற்றிப் பெருக்க மஞ்சி விடுகின்றேம். அவற்றை மற்றொரு அமயம் பார்க்கலாம். அவ்வானத்தினின்றும் குதித்த பொருள்களுள் சாத்திரங்களும் ஒன்றென்பது அவர்கள் கருத்து.

சாத்திரங்கள் என்றவுடன் மிகப் பலமான உணர்ச்சி கொள்தல் அச்சொற்பொருளறியாமையாலேயே என்பதிற் சிறிதும் தடையில்லை. இதற்குச் சான்றுகள் சில காட்டுவோம். நீண்டகாலப் பழக்கத்தால் தங்கள் தங்கள் தாய் மொழிகளினும் வடமொழி சிறப்பு வாய்ந்தது என்ற உணர்ச்சியை மக்கள் பெற்றுவிட்டார். அதற்குக் காரணம் என்ன என்பதை ஈண்டு ஆய்தல் வேண்டாம். அவ்வுணர்ச்சி நல்லுணர்ச்சியன்று என்பது நங் கருத்து. மொழியென்பது உள்ளக்கருத்தை வெளியிடுதற்குக் கருவியாக அமைந்துள்ள ஒன்றேயன்றி வேறன்று. இன்னமொழியிற் சொன்னாற்றான் கருத்து நிறைவேறுமென்பது மடத்தனம். அது உலகை ஏமாற்றச் செய்யும் சூழ்ச்சி. அதில் ஏமாற்றம் என்ன என்று கேட்கலாம். பலவுண்டு. செய்யும் எல்லாவற்றிற்கும் பொருளுணர்ந்து கொண்டால் உண்மை தேர்ந்தவுடன் நிலை வேறாகிவிடும். பின்னர் இத்துறையையே நம்பி உயிர்வாழும் கூட்டத்தாருக்கு வாழ்வு போய்விடும். அதுபற்றியும் பிறபற்றியுமே மக்கள் பொருளறியா நிலையிலுள்ள ஒரு மொழியை— உலக வழக்கொழிந்த மொழியைக் கற்க வேண்டுமென்றும் அம்மொழியே சிறப்புடையதெனக் கருத வேண்டுமென்றும் அக்குழுவினர் அறைந்து வருகிறார். ஆராய்ச்சியறிவு பெற்றார் அவர் கூற்றைச் சிறிதும் மதிக்கமாட்டார்.

அன்னார் கூற்றை நன்மக்கள் பலரும் கொண்டொழுகுவதும் அதனைக் கொள்ளுமாறு கூறுவதும் வருந்தத்தக்கது. எவர் கூறியபோதிலும் அது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. இத்தன்னதக்க கொள்கையால் விளையும் சங்கடங்கள் பல. பொருளறியாமல் தீச்செயலுக்குக் காரணமான காரியங்களையெல்லாம் புண்ணியம் என எண்ணிச் செய்வதனைத்தும் இக்கொள்கையாலேயே நம்மவர் முன்னேற்றமடையாதிருப்பதும் இதனாலேயே. இக்கொள்கையாளர் கூற்றுக்குச் சிறிதும் பொருளில்லை.

சத்தியமாக என்று சாற்றத் தயங்குகிறார். உண்மையாக— மெய்யாக— வாய்மையாக என்றெல்லாம் தாராளமாகப் பொய்யைக் கூறுகிறார். இவற்றிற்கும் அதற்கும் வேற்றுமை சிறிதேனும் உண்டோ? சாத்திரம் என்ற சொல்லுக்குப் பயப்படுவதுபோல் நூல் என்ற சொல்லுக்குப் பயப்படக் காண்கின்றோமில்லை. இதற்குக் காரணம் அறியாமை தவிர வேறென்? அஃதிருக்கட்டும்.

சாத்திரங்கட்கு— அதாவது நூல்கட்கு அஞ்சவேண்டுவது அவசியமா என்று ஆராயலாம். சாத்திரங்கள்— அன்றி நூல்கள் என்ற பெயரைக் கேட்ட அளவில் பயப்படவேண்டிய அவசியமே சிறிதும் இல்லை. சாத்திரங்கள் தோன்றிய நிலைமையை அறிந்த அறிவாளர், பெயரைக் கேட்ட அளவில் அச்சங்கொள்ளமாட்டார் என்பது ஒருதலை. சாத்திரங்கள் என்று சாற்றப்படும் நூல்கள் அனைத்தும் நல்லன என்று கூறமுடியுமோ? "ஆம்" என்று யாரும் கூறுவாரானால் அடுத்த கணத்தில் அவர் நமக்குத் தோற்றுவிடுவார் என்பதில் ஐயம் என்ன? அவர் கொள்ளும் சாத்திரங்களுள் எவ்வளவு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன! ஒன்று ஒன்றை வேண்டுமென்கின்றது; மற்றொன்று அதனையே வேண்டாமென்கின்றது. மாறுபட்ட கருத்துடைய இரண்டு சாத்திரங்களுள் எந்த சாத்திரத்தை நம்புவது? எதைத் தள்ளுவது? சாத்திரங்களைத் தள்ளலாகா என்ற பொதுக்கொள்கை வழிபார்க்கின் ஒன்றையும் அகற்றலாகாது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கை கொண்டதாயின் ஒன்றை அகற்றாமல் எப்படி முடியும்? அங்ஙனமின்றிச் சாத்திரங்கள் என்று மனிதர் சாற்றுகின்ற அனைத்தும் ஒரே முறைக் கொள்கைகளையே கூறுகின்றனவென்று சாத்திரப்பேய் பிடித்த எவருங் கூறுவாரேல் அவரைவிடப் பொய்யரும் அறிவிலரும் யாரே உளர்? சாத்திரங்களில் மாறுபாடு தோன்றுங்கால் ஒவ்வொருவரும் இயற்கையில் உள்ள அறிவைத் துணைக்கொண்டே முடிவு காண்டல் வேண்டும் எனச் சிலர் செப்பலாம். அது உண்மையே. இவ்விடத்து அறிவைக்கையாளும் உரிமை பெற்றோர் சாத்திரங்களனைத்தையும் அலசும் உரிமையை ஏன் இழத்தல் வேண்டும்! சாத்திரத்தோடு சாத்திரம் மாறுபடுங்கால்மட்டும் ஒன்றில் துணிபு பெற்று ஒரு சாத்திரத்தைத் தள்ள உரிமையுண்டென்றும் சொந்த அறி

(இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க.)

# "சர்க்காருக்கு ஜேய்"

## சர்க்கார் கக்ஷிக்கு சென்னை சட்ட சபையில் இன்னும் 5-மெம்பர்கள் அதிகம்.

(தொழிலாளர் நிலை.)

தாழ்ந்த வகுப்பார்களுக்கென்றும் தொழிலாளர்களுக்கென்றும் சர்க்கார் தயவில் இந்தியா பூராவுக்கும் 12 ஸ்தானங்கள் அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த 12-ஸ்தானங்களும் அந்தந்த வகுப்பார்களால் தெரிந்தெடுக்கப்படாமல் சர்க்காரால் நியமிக்கப்படுவதாய்ப் போய்விட்டது. இதற்காக நாம் தற்கால நிலைமையில் தொழிலாளர்கள் பொருட்டும் தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் பொருட்டும் விசனப்படாவிட்டாலும் ஓட்டர்கள் பொருட்டு நாம் மிகுதியும் விசனப்படுகிறோம். தொழிலாளிகளுக்கென்றோ, தாழ்த்தப்பட்டவர்களுக்கென்றோ தேர்தலுக்கு அந்தந்தப் பிரிவார் கொண்ட ஓட்டர் தொகுதியில்லாதவரையில் தற்காலத் தேர்தல்களைவிட நியமனம் அத்தனை மோசமானதல்ல வென்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில் தற்கால நிலைமையில் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கென்று சொல்லிக்கொண்டு ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் போன்ற ஒரு வருணாச்சிரம தர்மி நிற்கக்கூடும். அதற்கு மற்றொரு வருணாச்சிரம தர்மியான ஒரு மகந்து பணம் செலவு செய்யக்கூடும். ஆச்சாரியார் சட்ட சபையில் வந்து உட்கார்ந்துகொண்டு "ஒரு பார்ப்பனக் குழந்தை சாப்பிடுவதைக் கூட ஒரு பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்துவிட்டால் ஒரு மாதம் பட்டினி இருப்பேன்" என்று சொல்லுவார். பார்ப்பனரல்லாத உயர்ந்த ஜாதியார் என்போர் பார்த்துவிட்டாலேயே ஒரு மாதம் பட்டினி கிடக்கும் நமது ஆச்சாரியார், ஒரு சமயம் "தாழ்ந்த வகுப்பார்" என்று சொல்லப்பட்டவர்கள் பார்க்க நேர்ந்துவிட்டால் உடனே அவர்களைத் தூக்கில் போடவேண்டும் என்பதுதான் தீர்மானம் கொண்டு வருவார்.

அதுபோலவே தொழிலாளர்களுக்கென்று தேர்தல் ஏற்பட்டால் முதலாளிகளைவிட மோசமான முதலாளி கூட்டத்தினரான ஸ்ரீமான் எ. ரெங்கசாமி அய்யங்கார் தொழிலாளி அபேட்சகராக நிற்பார். ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பணம் செலவு செய்வார். சட்டசபையில் போய் உட்கார்ந்துகொண்டு பார்ப்பனர்கள் கூலி கொடுக்காவிட்டாலும் "சூத்திரர்களான" தொழிலாளிகள் வேலை செய்துதான் தீரவேண்டும். ஏனெனில் பார்ப்பனர்களுக்கு வேலை செய்வதற்கென்றே ("பார்ப்பனர்களின் வேசி மக்களான") "சூத்திரர்"களைக் கடவுள் சிருஷ்டித்து இருக்கிறார் என்கிற மனுதர்ம சாஸ்திரத்தைத் தீர்மானமாகக் கொண்டுவருவார். இந்த நிலைமையில் நல்லவேளையாக இப் பன்னிரண்டு ஸ்தானங்களும் பொதுத் தொகுதி தேர்தலுக்கு வராமல் போனதைக் குறித்து சர்க்காரின் நடவடிக்கைக்கும் இவ்விரு வகுப்பாரின் பாக்கியத்திற்கும் நாம் சந்தோஷப்படுகிறோம். ஆனால் பொதுத் தொகுதி ஓட்டர்களைப் பற்றி நாம் ஏன் விசனப்படுகிறோமென்றால், இந்த 12-ஸ்தானங்களின் தேர்தலுக்காக செலவு செய்யப்படும் பணத்தில் பங்கு பெறக்கூடிய யோகம் இந் நியமனங்களால் சில ஓட்டர்களுக்கு இல்லாமல் போய்விடுகிறதே என்பதுதான்.


நிற்க, சர்க்கார் இந் நியமனங்களையாவது அந்தந்த வகையாரிலேயே செய்வார்களா என்பது நமக்குப் பெரிதும் சந்தேகமாகவே இருக்கிறது.

இவ்வித அனர்த்தங்கள் விளைவுக்காரணஸ்தர்கள் யாரென்று பார்ப்போமானால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு விரோதிகளாயிருப்பவர்களேயாகும். எத்தனைக் கெத்தனை எல்லா வகுப்பாருக்கும் சரியான பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கில்லாமல் ஒரு வகுப்பாரே எல்லா வகுப்புக்கும் பிரதிநிதிகளாயிருக்க சூழ்ச்சியும் தந்திரங்களும் செய்கிறார்களோ, அத்தனைக் கத்தனை பிரதிநிதித்துவமற்ற வகுப்பார் சர்க்கார் தயவை நாடித்தான் பிரதிநிதித்துவம் பெற முடியும். இதில் சர்க்கார் தயவை நாடும் வகுப்பார் மீது கொஞ்சமும் குற்றமில்லை என்றுதான் சொல்லவேண்டும். "நானும் நீ பிரதிநிதித்துவம் பெற சம்மதிக்கமாட்டேன், சர்க்காரிடமும் பிரதிநிதித்துவம் பெறக்கூடாது" என்று யாராவது சொல்வார்களானால் அவர்கள் அப்பேர்ப்பட்ட கொடுமைக்காரர்கள் என்பதைப் பொது ஜனங்கள்தான் உணரவேண்டும். அல்லாமலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்துவிட்டால் சர்க்கார் தயவை எதிர்பார்ப்பதற்கும் ஆள்கள் இல்லாமல் போய்விடும். ஆதலால்தான் அதிக பிரதிநிதித்துவம் அடையத் தக்க முறையில் முன்னணியில் நிற்கும் பார்ப்பனரும், சர்க்காரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்றால் தங்களுக்கு ஆபத்து வந்துவிட்டதாய்ச் சொல்லிக்கொண்டு தேசம் போய்விடும்-தேசம் போய்விடும் என்று சத்தம் போடுவதே யொழிய வேறில்லை. தேசம் யாருக்குப் போய்விடும்? பார்ப்பனருக்கும் சர்க்காருக்கும்தான் போய்விடும்! மற்றவேறு யாருக்கும் போய்விடாது.

இப் பன்னிரண்டு ஸ்தானங்களுள் தொழிலாளருக்கு ஏற்பட்ட நான்கு ஸ்தானங்களில் ஒன்றுகூட தமிழ் நாட்டிற்கு இல்லாமல் போனதை நினைத்தால் நம் நாட்டு தொழிலாளிகள் ஏமாற்ற மடைந்ததாகவே கருதி துக்கப் படுவார்கள். ஆனால் அவர்கள் ஒரு சிறிதும் துக்கப்படக் காரணமில்லையென்றே சொல்லுவோம். சென்னை மாகாணத்திலாகட்டும் தமிழ் நாட்டிலாகட்டும் ஒழுங்கான தொழிலாளர் சங்கங்கள் ஒன்றுகூட இல்லை என்றே சொல்லுவோம். உதாரணமாக சென்னையில் உள்ள பக்கிங்ஹாம் கர்னாட்டிக் மில் தொழிலாளர்களின் யோக்கியதையோ மிகவும் வேடிக்கையானது. ஒரு தொழிற்சாலை தொழிலாளருக்கு இரண்டு சங்கம் இருக்கிறது. அதில் ஒன்று பார்ப்பனர் கட்சியான சுயராஜ்யக் கட்சியின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது; மற்றொன்று முதலாளிகள் கட்சியும் பார்ப்பனரல்லாத ஜஸ்டிஸ் கட்சியும் ஆகிய இவ்விரண்டு கட்சிகளின் ஆதிக்கத்திலுமுள்ளது. எப்படியெனில் முன்னையதற்கு ஸ்ரீமான் சிவ ராவ் என்கிற ஒரு பார்ப்பனர் அக்கிராசனர்; முதலாளியும் சுயராஜ்யக் கட்சி தலைவருமான ஸ்ரீமான் எ. ரெங்கசாமி அய்யங்கார் உப அக்கிராசனர்; இவர்கள் இருவரும் சுருதி யுக்தி அநுபவம் ஆகிய இம் மூன்றில் எந்த வகையில் தொழிலாளருக்குத் தலைவர்களாகவோ பிரதிநிதிகளாகவோ உரிமை உண்டு என்பது நமக்கு விளங்கவில்லை. இதுபோலவே மற்றொரு கட்சியாரான ஜஸ்டிஸ் கட்சியாருக்குத் தொழிலாளர் ஏறக்குறைய எல்லோரும் தங்கள் வகுப்பார் என்பதைத் தவிர, வேறு எந்த வழியில் இப்போதிருக்கும் முதலாளிகளையோ ஜஸ்டிஸ் கட்சியையோ சேர்ந்த தலைவர்கள் தொழிலாளிகளை நடத்தவோ பிரதிநிதிகளாகவோ உரிமை உடையவர்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

இவ்விரண்டுந்தான் இப்படி இருக்கிறது என்று வைத்துக்கொண்டாலும், தொழிலாளிகளுக்காவது தனித்த முறையில் தங்களுக்கு ஒரு ஸ்தாபனத்தை வைத்து நடத்திக் கொள்ள யோக்கியதை இருக்கிறதா என்று பார்த்தால், சில காரணங்களால் அதுவும் இருப்பதாகச் சொல்லிக் கொள்ளுவதற்கு யோக்கியதை இல்லை. என்னவெனில், காலம் சென்ற ஸ்ரீமான் டாக்டர் நாயர் பெருமானின் ஞாபக தினத்தைக் கொண்டாட சென்ற வாரம் சென்னை கடற்கரையில் ஒரு பெரிய கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் பக்கிங்ஹாம் கர்னாட்டிக் மில் தொழிலாளர்கள் சார்பாய் டாக்டர் நாயர் பெருமான் ஞாபகத்திற்காக ஒரு வெள்ளிக் கிண்ணம் அளிப்பதென்று தொழிலாளர்கள் சுமார் 5000, 6000 பேர் வரையில் வந்து கூடினார். அக்கூட்டத்திற்கு டாக்டர் நாயர் பெருமானால் ஆரம்பிக்கப்பட்ட பார்ப்பனரல்லாதார் கக்ஷித் தலைவரும் சென்னை அரசாங்க முதன் மந்திரியுமான கனம் சர். பனகால் ராஜா அக்கிராசனம் வகித்தார். இக்கூட்டத்திற்கு சென்னையில் உள்ள பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் ஏராளமாய் வந்திருந்தார்கள். இக்கூட்டமே சென்னைப் பார்ப்பனரின் கண்களுக்கு பெரிய கண்வலிபோல் இருந்திருக்கும் என்பது யாவருக்கும் தெரியும். அப்படியிருக்க அப்பார்ப்பனரின் தலைமையின் கீழ் உள்ள பார்ப்பனரல்லாத தொழிலாளிகளான ஆயிரக்கணக்கான பேர் கலகம் செய்வதற்கென்றே அக்கூட்டத்திற்கு வந்து அப்பார்ப்பனர்கள் திருப்தி அடையத்தக்க வண்ணம் அடிதடியும் கலகமும் உண்டாக்கியும் கல்லுகள் எறிந்து சிரபாதிகளைக் காயப்படுத்தவும் செய்தார்களாம். இப்படி இருந்தால் இவர்கள் தனித்து தங்கள் சங்கங்களை நடத்திக் கொண்டுபோகத்தக்க யோக்கியதை உடையவர்கள் என்று யார் ஒப்புக்கொள்வார்கள்? கலகம் செய்து கல்லெறிந்தால் யாருக்கு லாபம் ஏற்பட்டது, யார் யோக்கியதை குறைந்தது, என்று யோசித்தால் 'பார்ப்பனர்கள், தொழிலாளர்களுக்கும் புத்தியில்லை, அவர்களை நடத்த நாங்கள்தான் தர்மகர்த்தாக்கள் என்று சொல்லிக் கொள்ள இடம் கிடைத்தது. பார்ப்பனரல்லாத தொழிலாளிகளுக்கு, "காலிகள்" "கலகக்காரர்"கள் என்று சொல்லும்படியான கெட்ட பெயர் கிடைத்தது. காலஞ்சென்ற கனவானைக் கௌரவிப்பதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் தொழிலாளிகள் வந்து கலகம் செய்யக் காரணம் என்ன என்பது நமக்கு

(இதன் தொடர்ச்சியை 8-ம் பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே


# குடி அரசு.

அக்ஷய-ஹு ஆடி-மீ 10 உ


பார்ப்பனரல்லாதார்களுக்கு

ஓர்

# வேண்டுகோள்.

—(❁)—

தற்காலம் நமது நாட்டில் சட்டசபைத் தேர்தல் நெருங்கிவருகிறது. தேர்தல்களில் வெற்றி பெறுவோர்களில் பலருக்கு மந்திரி, தலைவர் முதலிய கொழுத்த சம்பளமுள்ள உத்தியோகங்களும், தங்களுக்கு வேண்டிய பலருக்கு 1,000 500 ரூபாய் சம்பளமுள்ள உத்தியோகங்கள் கொடுக்கக் கூடிய அதிகாரங்களும் கிடைக்க வசதியிருப்பதால், இத் தேர்தலுக்குப் பெரிய மதிப்பு ஏற்பட்டிருப்பதோடு, இவ்வுத்தியோகங்கள் அடைய எதிர் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு சட்ட சபையில் ஆள் பலமும் கட்சிப் பெயர்களும் வேண்டியிருக்கிறபடியால் தேசத்தின் பெயராலும் சமூகத்தின் பெயராலும் பலர் பல கட்சிகளை ஏற்படுத்திக்கொண்டு, ஒவ்வொன்றிற்கும் ஜனங்கள் ஏமாறத் தக்க வண்ணம் ஒவ்வொரு பெயரை வைத்துத் தங்களைப் போன்ற சுய நல வாதிகளாகப் பலரைச் சேர்த்துக்கொண்டு கூட்டுக்கொள்ளை அடிப்பது போல் பலவித மோச வார்த்தைகளையும் பொய் வாக்குத்தத்தங்களையும் ஓட்டர்களிடம் சொல்லி அவர்களை ஏமாற்றி ஓட்டுப் பெற பலவித முயற்சி செய்துவருகிறார்கள். நாட்டில் எங்கு பார்த்தாலும் சில வகுப்பினர் இதே வேலையாகத் திரிந்துவருகின்றனர். இதனால் தேசத்திற்கும் ஏழை மக்களுக்கும் திருத்தமுடியாத கெடுதிகள் ஏற்பட்டு வருகின்றன.

ஏழை மக்களிடத்தில் கவலையுள்ளவர்கள் இந்த சமயத்தில் அலட்சியமாயிருக்கக் கூடாது என்கிற எண்ணத்தின்பேரில் அனேகர் இதற்கேதாவது வழி செய்து ஏழை மக்களை உண்மை உணரும்படி செய்ய வேண்டும் என்கிற ஆசையின்பேரில் எவ்வளவோ முயற்சி செய்து வருகிறார்கள். இம்முயற்சியானது பலர் சேர்ந்து குறிப்பிட்ட கட்டுப்பாடோ திட்டமோ ஏற்படுத்திக் கொள்ளாமல் தனித்தனியாய்ச் செய்து வருவதால் எதிர்பார்க்கும் பலனை அடையக் கூடுமோவென சந்தேகிக்கக்கூடியதாயிருக்கிறது. இவ்வார ஆரம்பத்தில் ஸ்ரீமான்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரு, திரு. வி. கலியாண சுந்தர முதலியார், ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார், என். தண்டபாணி பிள்ளை முதலியவர்களோடு சென்னையில் கூடி இரண்டு நாள் யோசித்தும் பல காரணங்களால் தேர்தலுக்குமுன் ஒரு வித முடிவுக்கும் வரமுடியாமல் போய் விட்டது.

ஆனபோதிலும் ராஜீய விஷயத்திலும் சமூக விஷயத்திலும் வகுப்பு விஷயத்திலும் தேர்தல்கள் விஷயத்திலும் "குடி அரசு" தனது அபிப்பிராயத்தை கொஞ்சமும் ஒளிக்காமல் வெளியிட்டுக் கொண்டு வந்திருக்கிறது. அதே தத்துவங்களை வைத்துச் சில திட்டங்களைக் கோலி அவற்றை நிறைவேற்ற பலர் சேர்ந்து கட்டுபாடாக வேலை செய்வதற்காக அடுத்த வாரத்தில் ஒரு அறிக்கை வெளியிடவேண்டுமென்கிற ஆவல் கொண்டிருக்கிறோம். இவ்வறிக்கையில் பல கனவான்களின் கையொப்பங்களையும் சேர்த்து வெளியிட வேண்டுமென்கிற விருப்பம் கொண்டிருக்கிறபடியால் இத் தத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் கனவான்கள் தங்கள் பெயரையும், அவ்வறிக்கையில் சேர்த்துக் கொள்வதற்கு முழு விலாசத்துடன் தங்கள் சம்மதத்தையும் உடனே எழுதியனுப்பும்படி வேண்டிக் கொள்ளுகிறோம். தேர்தல் காலம் நெருங்கி விட்டதாலும் நாளுக்கு நாள் நெருக்கடி ஏற்பட்டு வருவதாலும் அன்பர்கள் அலக்ஷியமாயிருக்காமல் தயவுசெய்து அவசரமாகக் கவனிப்பார்களாக.

ஈ. வெ. இராமசாமி.

## ஜனாப் யாகூப் ஹாசன்.

(எதிரிகளுக்கு ஒரு நல்ல வேட்டை.)

ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க வேண்டும் என்று கஷ்டப்படுகிற அதன் எதிரிகளுக்கும் ஜஸ்டிஸ் கக்ஷியைத் திட்டி கூலி வாங்கிப் பிழைப்பவர்களுக்கும் இத்தமாதம் நடந்த சென்னை சட்ட சபைக் கூட்டத்தினால் ஒரு நல்ல வேட்டை கிடைத்ததென்றே சொல்லலாம். மலையாளக் குடிவார மசோதாவைப் பற்றி பார்ப்பனர்கள் பேரில் ஏற்பட்டிருந்த கெட்ட பெயரை மாற்றிக் கொள்ளவும் சர். கே. வி. ரெட்டி மலையாளக் குடிவார மசோதாவை நிறைவேற்றும் விஷயத்தில் ஆண்மையுடன் எடுத்துக்கொண்ட முயற்சியினால் ஏற்பட்டிருந்த நல்ல அபிப்பிராயத்தை மாற்றவும் நமது பார்ப்பனர்கள் ஜனாப் யாகூப் ஹாசன் சேட்டு பெயரால் தந்திரம் செய்து வெற்றி பெற்று விட்டார்கள். அதாவது ஜனாப் சேட் அவர்கள் சட்டசபைக்கு அபேக்ஷகராயிருக்கத் தனது சிறைவாசத்தால் ஏற்பட்டிருக்கும் தடையை நீக்கும்படி சென்னை அரசாங்கத்தாருக்கு மித வாதிகளைப்பிடித்து ஒரு விண்ணப்பம் செய்து கொண்டார். அது பலிக்காமல் போகவே இந்தியா அரசாங்கத்தாருக்கு ஒரு விண்ணப்பம் செய்து மிதவாதிகளைப் பிடித்து சிபார்சு செய்யச் செய்து பார்த்தார். அதுவும் பலனற்றுப் போயிற்று. இது தெரிந்த சுயராஜ்யக் கக்ஷியார் ஜனாப் சேட் அவர்கள் தங்கள் கக்ஷியில் சேராததாலேயே இப்படி ஏற்பட்டதென்றும் தங்கள் மூலமாய்ப் பிரயத்தனப்பட்டால் இதற்கு விமோசனம் ஏற்படும் என்றும் ஜாடை காட்டினார்கள். ஜனாப் சேட்டு அவர்களும் இதை நம்பி சுயராஜ்யக் கக்ஷியாரின் தயவை நாடி அவர்கள் பின்னால் திரிந்தார். இதன் பலனாக சுயராஜ்யக் கக்ஷியார் நமது சேட்டு அவர்களுக்குத் தனது தடையை நீக்கிக்கொள்ள இனிமேல் பிரயத்தனப்பட வேண்டிய அவசியமே இல்லாமல் செய்து விட்டார்கள். இம்மட்டோ! தேச மகா ஜனங்களுக்கே சேட்டு அவர்களின் தடை நீங்க இஷ்டமில்லை என்கிற தீர்ப்பையும் வாங்கிக் கொடுத்து விட்டார்கள்.

ஸ்ரீமான் ஒத்தக்காசு செட்டியாரை அந்த விதத்தில் கெடுத்தார்கள். ஜனாப் சேட் அவர்களை இந்த விதத்தில் கெடுத்தார்கள். இந்த விஷயம் சட்டசபைக்குப் போனால் ஜெயிக்காது என்பது நன்றாய்த் தெரிந்திருந்தும் தங்களின் "கட்டுப்பாட்டையும்" மீறிக்கூட ஜனாப் சேட் விஷயத்தில் நல்லது செய்யப் போகிறவர்கள்போல் நடித்துப் பார்ப்பனர்களுக்கும் சேட்டுக்கும் உள்ள பழைய விரோதத்தின் பழியை தீர்த்துக்கொண்டார்கள். இது போலவேதான் ஸ்ரீமான் ஒத்தக்காசு செட்டியார் ஜஸ்டிஸ் கக்ஷியில் இருக்கும்போது இந்தப் பார்ப்பனர்களை திட்டிய பழியைத் தீர்த்துக்கொள்ளவே, அவரைப் பிடித்து பனகால் ராஜாமீது பிரசாரு கொடுக்கச்செய்து செட்டியாரவர்களுக்கு என்றென்றைக்கும் மானக்கேடு வருவதற்கில்லாமல் செய்து, அவருக்கிருந்த பட்டத்தையும் ஒழித்து தங்கள் பழியைத் தீர்த்துக் கொண்டார்கள். இதை நமது சேட்டு அவர்கள் நன்றாய்ப் பார்த்திருந்தும் அவர்கள் கையில் சிக்கி இந்தக் கதிக்கு ஆளாகி விட்டார். இது உலக வழக்கம்தான். தாசி வீட்டுக்குப்போகும் வாலிபர்களைத் தடை செய்து அவர்களுக்குப் புத்தி சொன்னால் அவர்கள் கேட்பதில்லை. யாவர் வார்த்தையையும் தட்டி. அங்குபோய் சுகம் அனுபவிப்பது போல் நினைத்துக்கொண்டு தனது பொருள்களையெல்லாம் தோற்று ரத்தம் கெட்டு வியாதி பெற்று வீட்டுக்குத் திரும்புகிற காலத்தில் தான் படுகிறது. அதுவும் சிலருக்குத்தான் படுகிறது. சிலர் கடைசிவரை அதிலேயே உழன்று வருகிறார்கள். அது போலவே பார்ப்பனக் கக்ஷி என்றாலும் அதன் மறைபெயரான சுயராஜ்யக் கக்ஷி என்றாலும் ராஜீயத் துறையையே தங்கள் வாழ்வாய்க் கொண்டவர்களுக்கு அதனிடத்தில் பிரியமுடியாத மோகமாய்த் தான் இருக்கும். ஏனெனில் அக்கக்ஷியார் தாசிகளை விட அதிகப் பகட்டும் போலி அன்பும் காட்டுகிறார்கள்.

இவை ஒரு புறமிருக்க, சட்டசபையில் நடந்த கதைகளைக் கவனிப்போம். ஜனாப் சேட் அவர்களின் தடையை நீக்கவேண்டிய வேலை முற்றிலும் சர்க்காரையே சேர்ந்தது. அதனால் சர்க்காருக்கு ஏதேனும் பழி ஏற்படுமானால் அது முற்றிலும் சட்ட

மெம்பரையே சேர்ந்தது. சட்ட மெம்பர் தான் சர்க்காரின் இஷ்டத்தை நிறைவேற்றி வைக்கவேண்டியவர். அப்படியிருக்க, சட்ட மெம்பர் தைரியமாய் எழுந்து ஜனாப் யாகூப் ஹாசன் சேட்டின் தடையை நீக்குவதற்குப் போதுமான காரணமில்லை என்று சொல்லித் தனது கடனைத் தீர்த்துக்கொண்டார். ஆனால் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் தங்கள் இஷ்டத்தைத் தாங்களும் அதே மாதிரியாகவே ஒரு வார்த்தையில் சொல்லி முடித்துவிட்டு ஓட்டுக் கொடுக்கும்போது தங்கள் இஷ்டம்போல் நடந்து கொள்ளலாம் என்றிராமல் அனாவசியமாய் வியவகாரத்தில் தலையிட்டுக்கொண்டு தாறுமாறாய் உளறி இருக்கிறார்கள். அதில் சர். கே.வி.ரெட்டி அவர்கள் தன்பேரில் பொது ஜனங்கள் தப்பபிப்பிராயப்படும் வண்ணம் பேசியிருப்பதைப் பார்த்தால் நாம் வருத்தப்படாமலிருக்க முடியவில்லை. ஜனாப் யாகூப் ஹாசன் சேட்டைப் பற்றி நிகழும் வியவகாரத்தில் ஜனாப் சேட் அவர்களைப் பொறுத்தமட்டிலும் பேச வேண்டுமேயல்லாமல் தேசத்தின் பெயரால் ஜெயிலுக்குப் போனவர்களெல்லாம் 'பாப்பர்' களென்று சொல்லியிருக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. இம்மாதிரி இவர் சொன்னதால் ஜெயிலுக்குப் போன தேசபக்தர்களுக்குப் பெருத்த அவமானம் வந்துவிட்டதென்பதாக நாம் நினைக்கவுமில்லை. ஆனால் ஜஸ்டிஸ் கட்சியின் எதிரிகள் சர். கே. வி. ரெட்டியின் பேரில் பொதுஜனங்களுக்கு அதிருப்தி ஏற்படும்படி பிரசாரம் செய்ய இதை ஒருவகையாக உண்டாக்கிக் கொண்டார்களென்றுதான் நாம் சொல்லுகிறோம். இதன் பலனாய் சர். கே. வி. ரெட்டிக்கு ஒன்றும் நஷ்டம் ஏற்பட்டுவிடாது என்று நினைத்தாலும், அவர் சார்ந்திருக்கும் கட்சிக்குப் பாமரஜனங்களிடம் மரியாதை யில்லாமல் போய்விடுமென்பது சர். ரெட்டி நினைக்காமல் போனது அக்கட்சியின் துர்திர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

இதே மாதிரியாகவே பல சமயங்களில் பல பார்ப்பனர்களும் பாமர ஜனங்களிடத்தில் கவலையில்லாமல் சர்க்கார் தயவுக்காகப் பரிந்துபேசி சர்க்காரிடம் பரிசுகள் பெற்றிருக்கிறார்கள். உதாரணமாக ஸ்ரீமான் பி. என். சர்மா என்னும் ஒரு பார்ப்பனர் பஞ்சாப் அட்டூழியத்தின்போது லார்டு செம்ஸ்போர்டை ஆதரித்ததினால் மாதம் 6000 7000 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய உத்தியோகமும் சர் பட்டமும் அனுபவிக்கிறார். ஸ்ரீமான் வி. எஸ். சீனிவாச சாஸ்திரி என்கிற ஒருபார்ப்பனப்பள்ளிக்கூட உபாத்தியாயர் மகாத்மா காந்தியை ராஜத்துரோகி என்றும் மற்றும் பலவாறாகவும் திட்டியதின் பலனாய் "மஹா மஹா கனம்பொருந்திய" என்கிற பட்டமும் ராஜபோகமும் அனுபவிக்கிறார். ஸ்ரீமதி பெசண்டம்மையார் என்கிற ஆங்கிலமாது பஞ்சாப் அட்டூழியத்தில் ஜெனரல் டையர் சுட்ட குண்டுகளை ஆதரித்ததன் பலனாய் அம்மையாரின் சிஷ்யகோஷ்டிகளான ஸ்ரீமான் சி. பி. இராமசாமி ஐயர் போன்ற பலர் 5000, 6000 ரூபாய் சம்பளமும் நிர்வாக சபை மெம்பர் போன்ற பல உத்தியோகங்களும் சர் பட்டமும் ராஜபோகமும் அனுபவித்து வருகிறார்கள். ஒத்துழையாமையை ஒழிப்பதற்கு நமது பார்ப்பனர்களுக்காக ஆளாயிருந்த தேசபந்து வென்று சொல்லப்படும் பார்ப்பன மாப்பிள்ளையான நமது சி. ஆர். தாஸ் அவர்கள் நாகபூர் தேசீயக்கொடி சத்தியாக்கிரகத்தில் ஜெயிலுக்குப்போன ஆயிரக்கணக்கான தேசபக்தர்களைக் கஞ்சிக்கு வகையில்லாத ஆட்கள்தான் ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள் என்று சொன்னதன் பலனாய் விபீஷணாழ்வாரைப் போல் பார்ப்பனர் பூஜிக்கும் சிலையாய் "சுதேசமித்திரன்" ஆபீசிலும் பார்ப்பனர் மடங்களிலும் விளங்குகிறார்.

அதுபோலவே நமது சர். ரெட்டியும் ஜெயிலுக்குப் போனவர்களை 'பாப்பர்' என்று சொல்லிவிட்டுபோக போக்கியங்கள் அடைவதில் நமக்கொன்றும் முழுகிப் போகாது. ஆனால் முன்னவர்கள் சார்ந்ததாய்ச் சொல்லிக்கொண்ட கட்சியானது பொறுப்பற்றதாயும் தேசத்துக்கோ ஒரு சமூகத்துக்கோ எவ்வித நன்மைக்கும் அருகதையற்றதாகவும் பின்பற்றுவோரில்லாததாகவும் தங்கள் தங்கள் நன்மைக்கும் தங்களைப் புகழ்வோர்களின் நன்மைக்குமே ஏற்பட்டதாயிருந்து வந்தது. ஆனால் சர், கே. வி. ரெட்டி தன்னைப் பொறுத்தவரையில் என்று சொல்லிக் கொள்வாரேயானால் அதைப்பற்றி நாம் அவ்வளவு கவலைப் படவேண்டியதில்லை. ஆனால் நமது நாட்டில் ஜனத்தொகையில் 100-க்கு 97 பேர்களாயுள்ள பெரிய சமூகமான பார்ப்பனரல்லாதார் வகுப்புக்கு பிரதிநிதி என்று சொல்லிக்கொண்டு இம்மாதிரி பேசியிருப்பதானது பார்ப்பனரல்லாதார் என்கிற முறையில் நாம் கண்டிக்காமலும் சர். கே. வி. ரெட்டியின் தவறுதலுக்காக நாம் பரிதாபப்படாமலிருக்க முடியவில்லை. இவர் அம்மாதிரி பேசியதின் பலனாக அத்தீர்மானத்திற்கு என்ன அதிகமான ஆதரவு கிடைத்தது? அப்படிப் பேசாதிருந்திருந்தால் அத்தீர்மானத்திற்கு எவ்வித ஆதரவு குறைந்துபோயிருக்கும்? எப்பொழுது சட்ட மெம்பரான சர். சி. பி. இராமசாமி ஐயர் அத்தீர்மானத்தை எதிர்த்தாரோ அப்பொழுதே சர். கே. வி. ரெட்டி பேசினாலும் பேசாவிட்டாலும் அத்தீர்மானம் தோற்றுப் போய்த்தானே ஆகவேண்டும்? ஒரு சமயம் ஜெயித்துவிட்டாலும் சர். சி. பி. ஐயர் கவர்னரைக்கொண்டு (கேன்சல்) தள்ளுபடி செய்துதானே ஆகவேண்டும்? ஆதலால் இனியாவது இப்பேர்ப்பட்ட விஷயங்களில் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வார்களென்றே எதிர்பார்க்கிறோம்.

பொதுவாய் தேசத்திற்காகவும் மதத்திற்காகவும் ஜெயிலுக்குப்போன தேசபக்தர்கள் கூலி கேட்காமலிருந்தால்தான் அவர்கள் செய்த தியாகத்திற்குப் பலனும் மதிப்பும் ஏற்படும். அப்படிக்கில்லாமல் கேவலம் இந்த சட்ட சபைக்குப் போக பிரயத்தனப்பட்ட நமது ஜனாப் யாகூப் ஹாசன் சேட் அவர்கள் கருத்து நமக்கு விளங்கவில்லை. கிலாபத்துக்காகவும் சுய ராஜ்யத்திற்காகவும் ஜெயிலுக்குப் போன நமது ஜனாப் சேட் அவர்களுக்கு இப்பொழுது சட்ட சபைக்குப்போக வேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது. சட்ட சபைக்குள் சென்றதும் கிலாபத்தையும் சுயராஜ்யத்தையும் எடுத்து நிறுத்திவிடலாமென்று நினைக்கிறாரா? எந்த கெவர்ன்மெண்டாரை திட்டி ஜெயிலுக்குப் போனாரோ அந்த கெவர்ன்மெண்டுக்கே விண்ணப்பம் போட்டு தான் சட்ட சபைக்குப்போக அனுமதி கேட்பது நியாயமாகுமா? சர்க்கார் சட்ட சபையில் ஏதாவது செய்யக்கூடுமென்கிற நம்பிக்கை இவருக்கிருக்குமானால் முதலாவது இவர் செய்யவேண்டிய வேலை கெவர்ன்மெண்டாரை அடிபணிந்து, முன் தான் நினைத்ததற்கும் நடந்துகொண்டதற்கும் நிபந்தனையில்லாத மன்னிப்பு விண்ணப்பம் போட்டு மன்னிப்பைப் பெற்ற பிறகு சட்டசபைக்கு விண்ணப்பம் போட்டிருக்க வேண்டும். அப்படிக்கில்லாதவரையில் ஆண்பிள்ளை சிங்கம் போல் சர்க்கார் தயவை எதிர்பாராமல் சர்க்காராகவே தன்னை விரும்பும் வரையில் தன் ஜோலியைச் செய்துகொண்டிருக்க வேண்டும். அப்படியுமில்லாமல் இப்படியுமில்லாமல், கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்பதுபோல், வழ வழவென்று நடந்துகொண்டதானது ஜனாப் யாகூப் ஹாசன் சேட் அவர்களின் நிலைமை ஆடிப்போனதல்லாமல் நமது நாட்டு தேசபக்திக்கும் தியாகத்திற்கும் மாசை ஏற்படுத்தி வைத்துவிட்டார் என்று சொல்ல நேர்ந்ததுபற்றி நாம் மிகவும் வருந்துகிறோம்.

## புத்திவந்ததாம்.

### உதைப்பானுக்கு, வெளுப்பான் ஜாதி வண்ணான்.

ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் கூட்டத்தார் சில காலிகளைப் பிடித்து அவர்களுக்குக் கூலிகொடுத்து ஜஸ்டிஸ் கட்சியாரையும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் சூழ்ச்சிக்கு இணங்காதவர்களையும் பிரசங்க மேடைகள் மீதும் பத்திரிகைகளிலும் திட்டும்படி செய்துவந்தது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதன் பலனாய் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் கூட்டத்தாரை திட்டும் ஆட்களும் பத்திரிகைகளும் ஒன்றுக்குப் பத்து நூறு கணக்காய்ப் பெருகிவருவதைப்பார்த்த ஐயங்காருக்கு திடீரென்று புத்திவந்து இனிமேல் மேடைகளில் அபிப்பிராயப் பேதப்பட்டவர்கள் ஒருவரை ஒருவர் திட்டக்கூடாதென்றும் அன்பினால் வசப்படுத்த வேண்டுமென்று பத்திரிகைகளுக்கு தர்மசாஸ்திரம் எழுதியிருக்கிறார். இந்த ஞானம் ஆரம்பத்தில் எங்கேபோய் விட்டது?

---

## பிராமணீயம்!

இந்திய மக்களின் ஒற்றுமையைக் குலைத்து வேற்றுமையை அதிகரித்தது எது? சுய நலம் கொண்ட பிராமணீயமே.

இந்து முஸ்லீம் கலகங்களை விளைவிப்பது எது? சுயநலக்கூட்டத்தாரின் ஆதிக்கம் கொண்ட பிராமணீயமே.

இக் காலத்தில் பார்ப்பன-பார்ப்பனரல்லாதார் கட்சி உண்டாகக் காரண பூதமாய் நிலவுவது எது! பாழான பிராமணீயமே.

எனவே என் செய்தல் வேண்டும்? பிராமணீயத்தைச் சுட்டெரித்து சுடுகாட்டுக் கனுப்பவேண்டும். தமிழர்களே! ஒன்றுபடுக! ஒருங்கு சேருக! பிராமணீயத்துடன் போர் தொடங்குக! வீரர்கள் நம்மவரே! ஆதலால் வெற்றியும் நம்முடையதே! காகம் உறவு கலந்துண்ணக் காண்கிறீர். ஆதலால் சேரவாரும் ஜெகத்தீரே!

# ஈரோடு முனிசிபாலிட்டி.

## சேர்மனைப் பிராசிகூஷன் செய்யத் தீர்மானம்

ஈரோடு முனிசிபாலிட்டியில் ஏறக்குறைய 2-வருஷ காலமாக நடந்துவரும் அக்கிரமங்களைப் பற்றி அதிகாரிகளுக்கும் அப்போதைக்கப்போது இலாக்காத் தலைவர்களுக்கும் தெரியப்படுத்திக்கொண்டு வந்தும், அவர்கள் தங்கள் கக்ஷிக் காரணமாக சேர்மனை ஆதரிக்கவேண்டும் என்கிற தத்துவங்கொண்டு, வேண்டுமென்றே பிடிவாதமாய்ச் சேர்மெனின் அநேக அக்கிரமங்களுக்கு இடம் கொடுத்துக் கொண்டுவருகிறார்கள். ஏழை மக்களால் கொடுக்கப்பட்ட வரிப் பணத்தைத் தாறுமாறாய்ச் செலவு செய்வதுமாத்திரம் அல்லாமல் சொந்த உபயோகம் செய்து கொள்ளப் படுவதையும் இலாக்காத் தலைவர்கள் அனுமதித்து வருவதானால் அவர்களது கக்ஷிக்குள்ள மதிப்புக் குறைந்து போவதோடு அவர்கள் பேரில் எதிரிகள் கட்டிவிட்டுக் கொண்டிருக்கும் அயோக்கியத்தனமான பொய்யும் புளுகும்கூட வாஸ்தவமாயிருக்குமோ என்று ஜனங்கள் நினைக்கும்படி ஏற்பட்டுவிடுகிறது. சாதாரணமாய்க் கக்ஷிப் பிரிவுகள் பொதுஜன நன்மையை உத்தேசித்து அபிப்பிராய வித்தியாசம் காரணமாய் ஏற்பட்டதாகப் பொது ஜனங்கள் நினைக்கும்படியாய் இருக்கவேண்டுமே அல்லாமல் பொது சொத்தை சுயநலத்திற்கு அனுபவிப்பதற்கும் கையாடுவதற்கும் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஸ்தாபனம் என்றும் நினைக்க இடம் கொடுக்கக்கூடாது என்பதைப் பொது நோக்குடைய யாவரும் ஒப்புக்கொள்வார்கள்.

சாதாரணமாக ஈரோடு முனிசிபாலிட்டி விஷயத்தில் அதன் சேர்மென், தான் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்று வேஷம் போட்டுக் கொண்டிருக்கும் தைரியத்தினாலும் தனது இலாகாவின் ஆதிக்கம் ஜஸ்டிஸ் கக்ஷியின் கையிலிருக்கிறது என்கிற தைரியத்தினாலும் மற்றும் நியாய விரோதமாய்ச் சம்பாதித்த சிபார்சினாலும் முனிசிபாலிட்டியைத் தனது சொந்த உபயோகத்திற்காகத் தனது பெரியோர்கள் தேடி வைத்த சொத்து என்பதாக நினைத்துக்கொண்டு இதில் எழுத முடியாத அவ்வளவு நாணயக் குறைவாய் நடந்துகொள்வதென்றால் சுய மரியாதை உள்ள குடி ஜனங்களும் வரி செலுத்துவோர்களும் எப்படி சகித்துக்கொண்டிருக்க முடியும்? உதாரணமாக, பொது வேலைகளிலும் மற்றும் சாமான் வாங்கல் கொடுக்கல் விஷயங்களிலும் உத்தியோக நியமன விஷயங்களிலும் எவ்வளவோ அக்கிரமங்கள் சகஜமாய் நடப்பதோடுகூட தனது பணக் கஷ்டத்திற்காகத் தைரியமாய்ச் செக்கு எழுதிப் பணம் வாங்கித் தனது சொந்த உபயோகப் படுத்திக்கொண்டதாக கவுன்சிலர்களுக்கு சந்தேக மேற்பட்டு, சேர்மனை கேள்விகள் கேட்டதற்குச் சரியான பதில் இல்லாததால் கணக்குகள் பார்க்கவேண்டும் என்று அனுமதி கேட்டும் அனுமதி மறுத்ததால் கணக்குப் பரிசோதகருக்கும் கவர்ன்மெண்டுக்கும் எழுத நேர்ந்ததாகவும், அதன் பேரில் கணக்குப் பரிசோதகர்கள் கணக்குப் பார்த்ததில், இது மாத்திரமல்லாமல் இன்னும் பல கையாடல்கள் இருப்பதாகவும், கையாடிய பணத்தை நேர் செய்ய பல உண்மையற்ற கணக்குகளும், பிரயாணமே செய்யாமல் பிரயாணம் செய்ததாக ஒன்றுக்கு இரண்டாக செலவு பில் போட்டு அந்தப் பணத்தைச் சரிப்படுத்தப் பார்த்ததாகவும், பரிசோதனையில் சேர்மென் பிரயாணம் செய்த தேதிகளில் உள்ளூரிலேயே இருந்ததாக ரிகார்டுகளினால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென்றும், மற்றும் கவுன்சில் சாங்ஷன் இல்லாமல் கையாடிய தொகைகள் பல இருக்கிறதாகவும் அவைகள் சாங்ஷனானதாகப் பொய் ஆதாரங்கள் கற்பிக்கப்பட்டிருக்கிறதென்றும் இன்னும் பல நாணயக் குறைவுகள் இருக்கிறதென்றும் கண்டு பிடிக்கப்பட்டு 5, 6 மாதங்களாகியும் அதிகாரிகளால் துரிதமாய்க் கவனிக்கப்படாமல் இருப்பதாகவும், தவிர ஜில்லா கலெக்டர் துரைக்கு பல கவுன்சிலர்கள் இதைப்பற்றி தெரியப்படுத்தியிருந்ததாகவும் அவர் சேர்மெனை சில கேள்விகள் கேட்டிருந்ததாகவும், அதற்குச் சேர்மென் ஏதோ சில பொருத்தமற்ற பதில்கள் தெரியப்படுத்தியதாகவும் கலெக்டர் துரை அந்த பதில்களைக் கவுன்சிலில் வைத்துக் கவுன்சிலர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கச் சொல்லி திருப்பி அனுப்பிவிட்டதாகவும், அதைச் சேர்மென் மீட்டிங்கில் வைக்காமலும் வெளியில் தெரியப்படுத்தாமலுமே இருந்து வந்து தனக்கு வேண்டிய சில கவுன்சிலர்கள் மாத்திரம் வந்திருக்கும் சமயம் பார்த்து முன் அறிவிப்பு இல்லாமல் திடீரென்று கவுன்சிலில் வைத்து தன்னிஷ்டப்படி பாஸ் செய்து கொண்டதாகவும், இது சில நாள் பொறுத்து பெரும்பாலான கவுன்சிலர்களுக்குத் தெரியவந்ததாகவும், அதன் பேரில் இந்த விஷயம் தாங்கள் அறிவிப்புக்கு வரும் என்று எதிர்பார்த்திருந்த கவுன்சிலர்கள் ஏமாற்றமடைந்ததால் ஈரோடு முனிசிபாலிட்டிக்கு ஏற்பட்டிருக்கும் 20 கவுன்சிலர்களில் 12 பேர் சேர்ந்து அத்தீர்மானத்தை ரத்து செய்யவும் சேர்மெனின்மீது கிரிமினல் நடவடிக்கை நடத்த கவர்ன்மெண்டாரின் சாங்ஷன் கோரி முனிசிபாலிட்டிக்கு ஒரு தீர்மானம் அனுப்பியிருக்கிறதாகவும் நமக்குத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள்.

அத்தீர்மானமாவது:—

"தற்கால சேர்மென் முனிசிபல் பணத்தைப் பல தடவைகளில் கையாடியிருப்பதோடு மற்றும் பல குற்றங்கள் செய்திருப்பதாகவும் கணக்குப் பரிசோதகரால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் அவரைப் பிராசிகூஷன் செய்து கிரிமினல் கோர்ட்டில் நடவடிக்கை நடத்த அனுமதி கொடுக்கவேண்டுமாய் இந்தக் கவுன்சில் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது" என்பதேயாகும். இத்தீர்மானத்தை ஆகஸ்டு மாதம் 2-ந் தேதியில் ஒரு தனி மீட்டிங்கு கூடி அதில் இதைத் தீர்மானிக்க வேண்டுமென்று சேர்மெனுக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். அந்த நோட்டீசில் கையெழுத்துப் போட்டிருக்கும் கவுன்சிலர்களான 12 கனவான்களும் தக்க அந்தஸ்தும் கௌரவமும் பொருந்தியவர்களாயிருக்கிறார்கள். அதாவது:—

1. கா. அ. ஷேக்தாவூத் சாயபு
2. மு. ச. முத்துகருப்பஞ் செட்டியார்
3. ஈ. வெ. நஞ்சப்ப செட்டியார்
4. மு. ச. அ. பழனியப்ப செட்டியார்
5. R. சதாசிவம் செட்டியார்.
6. ஈ. ச. ரெங்கராஜுலு செட்டியார்
7. ஈர்ஜி காளிதாஸ் சேட்
8. E. G. சுப்பிரமணிய அய்யர்
9. K. M. ஸ்ரீனிவாசம் பிள்ளை
10. மு. செங்கோட கவுண்டர்
11. வெ. வ. சுப்பன்
12. சி. வ. சின்னப்ப முதலியார்

நமது சேர்மென் அவர்கள் இந்த நோட்டீசைப் பெற்றதும் இதைப் பின் வாங்கிக் கொள்ளும்படி ஒவ்வொரு கவுன்சிலர்களுக்கும் சிபார்சு பிடிப்பதும், தான் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவரானதால் கட்சித் தலைவர்களின் சிபார்சு பெற அங்கு மிங்கும் அலைவதும் இன்னும் இதில் எழுதமுடியாத பல பிரயத்தனங்களும் நடந்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் கவுன்சிலர்களில் பலர் பிடிவாதமாகவும் இதற்கு சரியான நியாயம் கிடைக்காவிட்டால் ராஜீநாமா செய்து விடுவதாகவும் தீர்மானித்துக் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

விளங்கவில்லை. தொழிலாளிகளுக்குப் பணம் இல்லாததற்குக் காரணம் வேண்டுமானால் முதலாளிகளின் கொடுமை என்று சொல்லிக் கொள்ளலாம்.

குலாபிமானமும் ஒழுங்கு முறையும் இல்லாததற்கு யார் பேரில் குற்றம் சொல்லுவது? பார்ப்பன விஷமமும் பார்ப்பன சூழ்ச்சியுந்தான் காரணம் என்று சொல்லவேண்டும். அத்தொழிலாளர் கூட்டத்தில் கண்ணியமான தொழிலாளர்களாயிருப்பவர்கள் டாக்டர் நாயர் பெருமானை உத்தேசித்தாவது தங்களின் இவ்வித நடவடிக்கைகளுக்குக் கடவுளை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டும். எவ்விதத்திலும் பார்ப்பனர் சம்பந்தத்தையும் முதலாளிமார்கள் சம்பந்தத்தையும் விலக்கிக்கொண்டு தங்கள் சொந்தக் காலிலேயே நிற்கவேண்டும். தங்களுக்கு எல்லா விஷயங்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி உழைக்கவேண்டும். அப்படிக்கில்லாத வரையில் தொழிலாளர்களுக்காக எத்தனை ஸ்தானங்கள் சட்டசபையிலோ இந்தியா சட்டசபையிலோ ராஜாங்க சபையிலோ வழங்கப்பட்டாலும் ஒரு பலனும் இல்லை என்றே சொல்லுவதோடு சென்னை சட்ட சபைக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்காக புதிதாக ஏற்பட்ட 5-ஸ்தானங்களும் சர்க்கார் கட்சிக்கு இன்னும் 5-மெம்பர்களை அதிகமாகக் கொடுத்திருக்கிறதென்றுதான் சொல்லுவோம்.

---

## "குடி அரசு"

நாம் "குடி அரசு" 12-ம் இதழில் 13-ம் இதழ் 25-7-26-உ வெளி வருவதைப்பற்றி ஐயப்பாடுடன் எழுதியிருந்ததை வாசகர்கள் கண்ணுற்றிருக்கலாம். எவ்வாறாயினும் 13-ம் இதழை 25-ந் தேதியிலேயே வெளியிடவேண்டுமென முயன்றதில் 12-பக்கங்களுடனேயே வெளியிட முடிந்தது. அடுத்த இதழ் முதல் 16-பக்கங்களுடன் 'குடி அரசு' வெளிவருமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# சென்னையில் நால்வர்.

காங்கிரஸ் பார்ப்பனரல்லாத தலைவர்களான ஸ்ரீமான்கள் திரு. வி. கலியாண சுந்தர முதலியார், ஈ. வெ. இராமசாமி நாயக்கர், டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரு, ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் ஆகிய நால்வரும் அரசியல், சமுதாய விஷயங்களில் தற்காலமிருக்கும் நிலைமையில் இனி தாங்கள் நடந்து கொள்ளவேண்டிய விஷயத்தைப்பற்றி சென்னையில் இம்மாதம் 19, 20-தேதி ஆகிய இரண்டு நாட்களிலும் கூடி ஆலோசித்தனர். முடிவில் அரசியல் விஷயம் சம்பந்தப் பட்ட மட்டில் ஒருவர் அபிப்பிராயம் மற்றவரைக் கட்டுப்படுத்தா தென்றும் சமூக சமத்துவ விஷயத்தில் ஒரேவிதமான அபிப்பிராயம் கொண்டவர்களாய் தாங்கள் எல்லோரும் இருக்கிறோமென்கிற ஒரு விதமான தீர்மானத்திற்கு வந்தனர்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

வுகொண்டு சாத்திரங்கள் பிழைபடுமானால் விலக்குதல் தவறு என்றும் கூறும் உரை பொருளற்ற வெற்றுரை என்க.

சாத்திரங்களானாலென்? வேதமேயானாலென்? அவை கூறுவனவற்றிற் தவறுகாணுமேல், உடனே அவற்றைத் தள்ளித்தொலைப்பதில் என்னே பிழை? அறிஞர் அதிற் சிறிதும் பின்வாங்கமாட்டார். சாத்திரங்கள்—அல்லது நூல்கள் என்றால் என்ன? எல்லாம் நம்மைப் போன்ற மக்கள் செய்தவையே. தேவலோகத்திலிருந்து குதித்தவையாகவும் இறைவன் நம்மைப்போல் உருவெடுத்துப்பிறந்து திருவாய் மலர்ந்தருளியதாகவும் பிறவும் கூறும் அனைத்தும் பொய்! பொய்!! பெரும் பொய்!!!

மனிதர்களால் ஆக்கப்பெற்றதை ஆயவும் தள்ளவும் கொள்ளவும் மனிதர்கட்கு ஏன் உரிமையில்லை? அதற்கு உரிமையில்லையென்று உரைப்போர் மனிதத் தன்மை பெறாதவரேயாவர்.

சாத்திரங்கள் கூறுவன அனைத்தும் கொள்ளத்தக்கனவுமன்று. அவைகூறு அனைத்தும் தள்ளத்தக்கனவும் அன்று. சாத்திரங்கள் கூறுவனவற்றுள் தள்ளத்தக்கனவும் உண்டு. அவை கூறுதவற்றுள் கொள்ளத்தக்கனவும் உண்டு. சாத்திரங்கள் என்ற சொல்லைக்கேட்டு யாரும் அஞ்சவேண்டுவதில்லை. மயங்கவேண்டுவதில்லை; மருளவேண்டுவதில்லை; அவை கூறும் தீச்செயல்களையும் செய்தழிய வேண்டுவதில்லை. சாத்திரங்கள் எல்லாவற்றையும் நன்றாக ஆராயலாம். நல்லன கொள்ளலாம்; தகாதன தள்ளலாம். நோக்க வேண்டுவது நன்மையா, தீமையா, என்பதே. ஆற்றத்தக்கது அறம்! ஆற்றத்தகாதது மறம். அறம் கூறும் அளவில் சாத்திரங்களைக்கொள்ளலாம். மற்றவற்றில் அவை—சாத்திரங்கள் தள்ளித்தொலைத்துத் தலைமுழுகத்தக்கனவே. எனவே அன்பர்கள் சாத்திரங்கள் சாத்திரங்கள் என்று பைத்தியம் பிடித்தலையாமல் அறம் அறம் என்று ஓயாது அறைந்துகொண்டு அறங்கொண்டொழுகுவாராக!

"ஊழியன்"

# மூவகை பகிஷ்காரம்.

(கோவை திரு. வி. மகாலிங்கய்யர் எழுதுவது)

மது விலக்கு, அந்நிய நாட்டு ஆடை விலக்கு, பிராமணீய விலக்கு-என்ற மூவகை பகிஷ்காரம் பிரசாரமாகி வருகிறது. இந்த மூன்றையும் ஒருங்கே தேர்தலில் நிறைவேற்றிக் கொள்ளலாம்,-நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்,

எங்கள் சமூகத்தின் எண்ணிக்கைக்கு மிகவும் அதிகமாக பிராமண அபேக்ஷகர்கள் காங்கிரஸ் கமிட்டியாரால் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இது எந்த தேசாபிமானிக்கும் அதிருப்தியையே தரும். பிராமணரல்லாத அபேக்ஷகர்கள் உதயமாகும் பட்சத்தில் அவர்கள் காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு உடன்பட்டு நடப்போம் என்று எழுத்து மூலியமான உறுதி வாக்களித்திடும் பக்ஷத்தில் ஏற்கனவே நியமனம் பெற்ற அபேக்ஷகர்கள், ஆனந்தத்துடன் விலகி, பிராமணர் அல்லாத சகோதரர்களுக்கு இடம் தந்திட வேண்டும். பிராமண அபேக்ஷகர்கள், தாங்கள் பொருளையும், பொழுதையும், சுறுசுறுப்புகளையும்; செல்வாக்குகளையும், கம்பீர அந்தஸ்துகளையும், பல மாதங்கள் தேர்தல் பிரசாரத்தில் செலவிட்டு விட்டு, இப்போது ஸ்தானம் விட்டுக் கொடுப்பது என்று தயங்கக் கூடாது. அவர்கள் படும் பாட்டின் நோக்கமெல்லாம், தேசத்தில் சகல வகுப்புகளிலும், ஸ்வராஜ்ய தாகம், ஸ்வராஜ்ய விவேகம், ஸ்வராஜ்ய வேகம் ஆகிய இவைகளை உண்டாக்க வேண்டும் என்பதே. அந்த எண்ணம் கொள்ளாமல், தங்கள் தங்களுக்கு ஸ்தானம் பெறுதலே, நோக்கமாக இருக்கும் பக்ஷத்தில், அப்போர்க்கொத்த பிராமண அபேக்ஷகர்கள் தேர்தலில் தோல்வி அடைவது, காங்கிரஸுக்கும் தேசத்திற்கும், நன்மையைத்தான் தந்திடும்.

ஆகையால், பிராமணீய பகிஷ்காரம் நிறைவேற்றப்பட வேண்டுமானால், பிராமணரல்லாதார்கள், காங்கிரஸ் குடையின் கீழ் நடந்து கொள்ள விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும் பிராமண அபேக்ஷகர்கள் விலகிக் கொள்ளாவிட்டாலும்-அல்லது தமிழ் நாட்டு கமிட்டி அவர்களை விலக்காவிட்டாலும், வோட்டர் சமூகம் இந்தப் பரிதாபத்தை உணர்ந்து, காங்கிரஸ் நிர்வாகம் பிராமண நிர்வாகம்-என்று மதித்து-பிராமண பகிஷ்காரக் கொள்கையை அனுசரித்து காங்கிரஸால் நியமனம் பெற்ற பிராமணர்களுக்கு ஓட்டுக் கொடாமல், காங்கிரஸ் குடைக்குள் நடக்கத் தயாராயிருக்கும் பிராமணரல்லாதாருக்கே ஓட்டு செய்வது தேச முன்னேற்றத்திற்கு பெரு ஒத்தாசை புரிவதாகும்.

சில பிராமணரல்லாதார்கள் எலெக்ஷனுக்காக காங்கிரஸுக்குள் நுழைவதைப்பெருத்த அவமானமாகக் கருதுகிறார்கள்; தங்களுடைய சொந்த ஆணவத்திற்கு இது பெரிய பங்கமாக எண்ணுகிறார்கள். இது மிகவும் துர்ப்பாக்கியமான தப்பிதம். அபேக்ஷகர்களுடைய பிரத்தியோகமான பெருமைக்காக, தேர்தல் நடைபெறுகிறது என்கிற பைத்தியக்கார எண்ணம் பரவிக்கிடக்கின்றது. இந்தப் பாழும் எண்ணம் ஒழிந்து போக வேண்டும். தேச சேவைக்காகத்தான் தேர்தல் எனக்கருதப்பட வேண்டும்.

ஆனால் பிராமணரல்லாதார், பிராமணரை அப்புறப்படுத்தி ஜெயம்கொள்ள நினைத்தால் தேசம் இருக்கும் நிலைமையில் அதுவும் தேசசேவை தான். ஏனென்றால் இப்போது பிராமண பகிஷ்காரம், ஓர் உண்மையான தேசசேவை. அந்த சேவை புரிவதற்காகவும் மற்றும் நிர்மாண திட்டமாகிய மதுவிலக்கு, அந்நிய ஆடை விலக்கு இரண்டையும் சேர்த்து வேலை செய்வதற்காகக் காங்கிரஸுக்குள் சேர்ந்து கொள்ளவேண்டும்.

மேலும், சில பிராமணரல்லாதார்கள், கதர்போட்டுக் கொண்டால் வேஷம் என்று பயந்து கொண்டு, அவமானம் கொண்டு, கதர்போட மறுக்கின்றார்கள். இதுவும் மிகவும் துர்ப்பாக்கியமான தப்பிதம். இவ்வெண்ணங்கள் உடனே பட்டுப்போகவேண்டும். தவிர, மூட்டைப்பூச்சிக்கு பயந்து கொண்டு வீட்டைக் கொளுத்திக் கொள்வது போல் பிராமணீயம் மிக்க ஜாஸ்தியாகக் கொண்டாடப்படுகிறது. கட்சி என்று மிகவும் பரிமாறப்பட்டு எதிர் கட்சிகள் தொடரப்படுகின்றன. கட்சி கட்டலும் வேண்டாம்; எதிர் கட்சி ஸ்தாபனங்களும் வேண்டாம்.

சமூகத்தில் சொல்லியபடி, பிராமண பகிஷ்காரம் என்பதைக் கொள்கையாகவே எதிர் முகமாகக் கொண்ட கட்சியானாலும் சரி, கட்சியில்லாவிட்டாலும் சரி, பிராமணர்களை இப்போதைக்கு வேண்டாம் என்கிற ஒரே கட்டுப்பாடு போதுமானது.

இப்படிச் செய்வதில் ஒரு அநியாயமும் இல்லை. வெள்ளைக்கார ராஜாங்கம், இவ்வளவு பாசாங்குதனால் நம்மைக் கட்டிவைத்திருப்பதற்குக் காரணமே—நமது இங்கிலீஷ் படித்த பிராமண வம்சத்திய உத்தியோகஸ்தர்கள்தான். அந்நிய ஆட்சிபாரத்தை நம்தோளிற்சுமத்தியவர்கள் இவர்களே. இதற்கு பிராயச்சித்தம் பிராமண பகிஷ்காரத்தைத் தவிர வேறு வழியில்லை.

மற்றும் ஒன்று பிராமண பலம். உத்தியோக பலம் என்று கருதும் பிராமணரல்லாதார்கள் பிராமணர்களைத் தாக்குவதற்கு சரியான வழி, உத்தியோக வர்க்கத்தைத் தாக்குவதுதான் என்று கருதவேண்டும். ஆகையால் சர்க்காரிடம் பிச்சைக்கு போட்டி போட்டுக்கொண்டு ஓடாமல் சர்க்கார் வர்க்கம் பிராமணவர்க்கம் இரண்டையும் ஒருங்கே தாக்கி ஒரே அடியாய் இரண்டு இடையூர்களையும் நீக்க முயலவேண்டும்.

வோட்டர்கள் கேள்விகள் கேட்டுக் கொண்டே இருக்கவேண்டும். இவர் கதரை அபிமானிக்கின்றவரா, மரத்தைக் கள்ளுக்கு விடுகின்றவரா, தேசசொத்தை கொள்ளையடிக்கும் சர்க்காரிடம் பட்டங்களையும் உத்தியோகங்களையும் நாடுபவரா, இவர் கூடிய மட்டில் மகாத்மா மீது பக்தரா, தீண்டாமை ஒழிப்பதில் தீவிரம் உடையவரா—என்று கூர்மையான மூளையுடன் கூடிய கேள்விகளையே கேட்டுக்கொண்டிருக்கவேண்டும்.

வோட்டர்களும், தங்களைத் திருத்திக் கொள்ளவேண்டும்-வோட்டுப்போடும் இடத்திற்கு எதிரிலேயே சென்று வோட்டுப் போடத் தயாரித்துக்கொள்ளவேண்டும்.

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

### லாட்டரியின் வெற்றி.

அபிமானிகளின் சுற்றுப்பிரயாணம்.

ஐயன்மீர்!

நமது லாட்டரியின் வெற்றியை நோக்கிப் பல பாகங்களுக்கும், நமது அபிமானிகள் புறப்பட்டு சென்றுகொண்டிருக்கிறார்கள். நகரப் பகுதிகளில் பிரபல ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

திருவிதாங்கூர் சமஸ்தானம். வட்டகை முற்றிலும் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காக, காரியதரிசி கனம் பா. ம. பாண்டிய நாடார் அவர்களும், டிராயிங் ஏஜண்ட் ஸ்ரீமான் A. M. S. அண்ணாமலை நாடார் அவர்களும் புறப்பட்டு சென்றிருக்கிறார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவின் பல பாகங்களிலும் தீவிர வேலை செய்வதற்காக, டிராயிங் ஏஜண்ட் ஸ்ரீமான் S. R. மூக்க நாடார் அவர்கள் புறப்பட்டு சென்றிருக்கிறார்கள்.

கோயம்புத்தூர், தஞ்சை, ஆற்காடு ஜில்லா முதலிய பல இடங்களிலும் ஏராளமான சிட்டுகள் விற்பதற்காக டிராயிங் ஏஜண்ட் ஸ்ரீமான் தி. கருப்பையா பிள்ளை அவர்கள் சென்றிருக்கிறார்கள்.

திருச்சி, தஞ்சை, கும்பகோணம், மாயவரம், கூடலூர், மதராஸ் முதலிய முக்கிய நகரங்களில், விசேஷ கிளர்ச்சியை யுண்டுபண்ணி லாட்டரியில் வெற்றிக்கொடியை ஜெய கோஷத்துடன் நாட்டுவதே கடமையாகக்கொண்டு நாடார் ஊழியப் பிரசார சபை பிரசிடெண்ட் ஸ்ரீமான் ப. வ. சோமசுந்திர நாடார் அவர்களும், நாடார் பிரஸ் மானேஜிங் டைரெக்டர் ஸ்ரீமான் K. முத்துகுமாரசாமி நாடார் அவர்களும் சில தினங்களில் புறப்படுகிறார்.

ஆங்காங்குள்ள அபிமானிகள் இவர்களை ஆதரித்து நமது காரியத்தை ஜெயத்துடன் முடித்துக்கொடுக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

மதுரை, 16-7-26. } பா. ம. பாண்டிய நாடார், ஆ. அ. ஆறுமுக நாடார், காரியதரிசிகள்.

## பவானியில் காலரா.

கோயமுத்தூர் ஜில்லா சுகாதார இலாகா அதிகாரி பொது ஜனங்களுக்குத் தெரிவிப்பதாவது:—

பவானி தாலூகாவில் ஜூலை மாதம் 12-ந் தேதி வரையில் 129 பேர்கள் காலரா என்னும் கொடிய பிணிவாய்ப்பட்டு, 67 பேர்கள் இறந்து விட்டனர். பவானி நதிக்கரையிலுள்ள மற்றும் பல கிராமங்களும் இந்நோயால் பிடிக்கப்பட்டிருக்கின்றன. வேண்டிய அளவு தடுக்குமுறை சிரத்தையுடன் எடுத்துக்கொண்ட போதிலும், வரப்போகும் ஆடி 18 ஸ்நான உத்ஸவத்திற்கு தீர்த்த யாத்திரிகள் இந் நோயால் பிடிக்கப்படுவார்களென்ற பயம் இருப்பதால், அவர்கள் அங்கு போகொணாமல் இதன் மூலம் தடுக்கப் படுகிறார்கள் அசந்தியம் தீர்த்த யாத்திரைக்குப் போக விரும்புவோர் காலரா அம்மை குத்திக்கொண்டு போகலாமென தெரியப் படுத்தப்படுகிறார்கள்.


## இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு "லிமிடெட்." கோயமுத்தூர்.

காப்பு திரவியம்—ரூ. 2,706.

| | |
|---|---|
| மூல திரவியம் — | ரூ. 5,00,000. |
| வெளிவிடப்பட்டது — | ரூ. 69,100, |
| வசூலிக்கப்பட்டது — | ரூ. 43,890. |
| டிபாசிட்டுகள் | ரூ. 62,580-1-0. |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கெடுவு வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12—0
இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறை யாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் கொடுக்கப்படும்.

ஷ பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்ந்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளிலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயர்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி ஒவ்வொரு பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி. ராமச்சந்திர செட்டி,
31—5—26. மானேஜிங் டைரக்டர்



ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.
உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனாதி தயிலம்.

இந்த தயிலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய், மண்டைக் குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்துகொண்டே யிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவு. பாட்டல் ரூ. 4—0—0
12 அவு. பாட்டல் ரூ. 2—2—0
வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

## சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0
வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்த ஆயுர்வேத ஔஷதசாலை,
தெப்பக்குளம் போஸ்டு திருச்சினாப்பள்ளி.



பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

சற்குருவே துணை.

# ஸ்ரீ நமசிவாயகுரு தமிழ்சித்த ஆயுள் வேத வைத்தியசாலை, கோயமுத்தூர்.

இக் கோயமுத்தூரிலும் சென்னை முதலான விடங்களிலும் தீராதெனக் கைவிடப்பட்ட கொடிய வியாதிகளை வெகுசீக்கிரத்தில் சவுக்கியம் செய்து அநேக நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசுகளும் மேடல் சங்கிலி முதலியவை பெற்றவரும் ஸ்ரீ நமசிவாய குரு தமிழ் சித்த ஆயுள் வேத வைத்திய சாலை அதிபருமாகிய கோ. ந. முருகைய பண்டிதர் அவர்களால் தயார் செய்யப்பட்டு உலக பிரசித்தி அடைந்து வரும் ஔஷதங்கள்.

## மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்.

மேலேகண்ட மேகராஜாங்க மதன விந்தாதி லேகியத்தை காலை மாலை இரு வேளையாக ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவதினால், 20 வகை மேகத்தை போக்கி தேகத்தை பசும் பொன் போல் செய்வது மன்றி, சிலேற்பனம் 96ம் கிரந்தி, அரையாப்பு, சூலை, க்ஷயம், ஈளை இருமல், மந்தாரகாசம், காமாலை, சோகை, பாண்டு, குன்மம் 8-ம் கிரிச்சனங்கள் 6-ம் வாய்வு 20ம் பித்தம் 40-ம் இலிங்க புற்று, ஸ்திரிகளுக்கு யோனி புற்று, வெள்ளை, மஞ்சள் வெள்ளை, பிர மேகம் சொறி கரப்பான், மேக ஊறல், தண்டில் புண், கண்ட மாலை, மகோதிரம், சீராமை, கவுசி, உளமாந்தை, அஸ்திஜுரம் அஸ்திவெட்டை, உஷ்ண வாய்வு அரோசகம், அன்னத்துவேசம் வாந்தி, விக்கல், கால்கை எரிவு, பெரும்பாடு, எலும்பு புருக்கி நோய், மூல வாயுவு, மூலத்தில் ரத்தம், சிரு கிருப்பு மயக்கம், நித்திரை, ஸ்திரிகளுக்கு கெற்ப நோய் 7ம் ஸ்திரிகள் மலடியாயிருந்தால் கெற்பம், நீரடைப்பு, சதையடைப்பு, துர்மாங்கிச அடைப்பு, சிரக்கடுப்பு, முதலான கொடிய ரோகங்களை சுகப்படுத்தி தேகம் சிவந்து மின்னும் இந்திரியம் இருகி கட்டும் இதை வயோதிபர்கள் சாப்பிட்டு வருவார்களானால் ஜீவாதாரசரம்புகள் முருக்கேறி தாது விர்த்தியையும் ஆண்மையையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் ஆனந்த சுகத்தையும் கொடுப்பதில் இதற்கு நிகரான லேகியம் வேறேயில்லை யென்று உறுதியாய் கூறுகிறேன். ஆண் பெண் யாவர்களும் சாப்பிடலாம் ஒரு தரம் வாங்கி அநுபவிப்பீர்களானால் இதன் உண்மை நன்கு விளங்கும். பத்தியமில்லை.



48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் சேர் 1-க்கு விலை 5-0-0

24-நாள் ,, சேர் ½-க்கு விலை 2-8-0

12-நாள் ,, சேர் ¼-க்கு விலை 1-4-0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

---

குணத்திற் சிறந்தது! விலை குறைந்தது!! பரிமளமிகுந்தது!!!

## சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்.

மேலே கண்ட சுகந்த பரிமளாதி ஸ்நானத் தைலத்தை ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்து வருவதாலும் நித்தியம் தலையில் தடவி தலைவாரி வருவதினாலும் திரும் வியாதிகள், மேகம், நீரளிவு, நீர் எரிச்சல், கிரிச்சனம், க்ஷயரோகம், கண்ணெரிவு, கண் புகைச்சல், கைகாலெரிவு, பிரமேகம், சொனம், கிரந்தி சுற்றுலை வாதம், அஸ்திஜுரம், அஸ்தி வெட்டை, உள் வெட்டை, தாது நஷ்டம் பித்தத்தாலுண்டாகும் மயக்கம் புண் புரை முதலானவைகளும் குழந்தைகள் முதல் ஆண் பெண் யாவர்களும் தலைக்கு பத மிட்டு வாரி வந்தால், தலையில் மேகத்தினாலுண்டாகும் பொடு அதினால் சகிக்க முடியாத அரிப்புண்டாகி கோதுமை தவிடுபோல் உதிருகின்றதும் மாறிப்போகும். இந்த தைலமானது எங்கள் முன்னோர்களால் கையாண்டு வந்ததும் என் அநுபவத்துக்கு வந்து ஆயிரக்கணக்கான ரோகிகளுக்கு சகல வியாதிகளையும் சவுக்கியப்படுத்தி இருக்கிறேன். மேற்படி சுகந்த பரிமளாதி ஸ்நான தைலமானது யாதொரு நோய் வராமல் பாது காப்பதோடு ராஜ கருவியாகிய மூளைக்கு குளிர்ச்சியையும் கண்களுக்கு பூரண சந்திரன் போன்ற குளிர்ந்த பிரகாசத்தையும் திவ்விய தேஜஸ்ஸையும் ஞாபக சக்தியையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. பத்தியமில்லை.

☞ 24-அவுன்ஸ் கோண்ட சீசா 1-க்கு விலை 5—0—0 ☞ 12-அவுன்ஸ் கோண்ட சீசா 1-க்கு விலை 2—8—0

☞ 6-அவுன்ஸ் கோண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

---

## வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை.

மேலேகண்ட கஸ்தூரி வாய்வு குளிகையானது தங்கம், வெள்ளி, முத்து, பவளம் தாம்பிரம் முதலாகியவைகளாலும் உயர்ந்த சரக்குகளாலும் பெரும்பாலும் சாஸ்திர ரீதியாய் மிக்க பிரயாசையுடன் யாவரும் எளிதிலடையும்படி சித்தம் செய்யப்பட்ட இந்த கஸ்தூரி வாய்வு குளிகையை உபயோகித்து வருவதினால் உஷ்ணத்தினாலுண்டாகும் வாய்வு, மாரடைப்பு, இடுப்புவலி, வயற்றுப்பிசம், நீர்கட்டு, பெண்களுக்கு கெற்பையிலுமுள்ள ரணம், அதனால் சீவுண்டாகி வயற்றில் குத்தல். வெள்ளை விழுதல், சகிக்க முடியாத வயற்றுவலி, இவ்வித வியாதிகளுக்கு இங்லீஷ் வைத்தியர்கள் வயிற்றை ஆப்பிரேஷன் செய்து பார்க்காமல் நிவர்த்தி செய்ய முடியாதென்று முடிவு சொன்ன வியாதிகளை அநேகர்களுக்கு எங்களுடைய வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகையினால் நாலு ஐந்து வேளையில் பூரண சொஸ்தப்படுத்தி அதனால் பரிசுகளும் மெடல்களும் சங்கிலி முதலானதும் பெற்றிருக்கிறேன்.

மேல்கண்ட வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை அற்புத குண முடையன என்பதிற் சற்றும் சந்தேகமில்லை.

☞ 12-மாத்திரை கோண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

உபயோகப்படுத்தும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

☞ ஏஜண்டுகள் தேவை தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மருந்து கிடைக்குமிடம்:—

**பழனிவேல் பிள்ளை,**

சோல் ஏஜண்டு, பெரியகடை வீதி, கோயமுத்தூர்.

# மின்சார ரசம்

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது.

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அநுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பாலர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரிகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



இங்கிலீஷ் படிக்க அவலுடன் எதிர்ப்பார்த்திருந்த அன்பர்களே! என் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்!!

23000 ஜனங்களுக்கு ஆங்கிலம் விரைவில் கற்றுகொடுத்தது

7-ம் பதிப்பு] இப்புத்தகம் ஒன்றேதான்!!! [7-ம் பதிப்பு

7000-பக்கங்கள் கொண்ட முழு கலிகோ பயிண்டு புத்தகம் விலை ரூ. 2. ஸ்ரீராமர் சீதா திருக்கலியாண படமும், பட்டாபிஷேக ஆட்டோன் படமும் உள்ளது.

## "ஆங்கில ஆசான் அல்லது போதினி"

எமது ரிஜிஸ்டர்ட் "லேடி டிரேட் மார்க்கு" போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!

மோசம் போகாதீர்கள்.



தமிழ் தெரிந்தவர்கள் ஆங்கில பாஷையை ஆசிரியர் இல்லாமலே அதி சீக்கிரத்தில் பணச் செலவின்றி சுயமாகவும், சுலபமாகவும் கற்றுக்கொள்ளலாம். உலக அநுபவத்திற்கு வேண்டிய பல விவகாரங்களின் பதங்களைப் படிப்படியாக நூதன பாட முறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. கிராம முன்சிப், கர்ணம், கான்ஸ்டேபில்கள், கங்காணியர்கள், பட்லர்கள் முதலிய எல்லா தொழிலாளர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

23000-காப்பிகள் இது வரையில் செலவழிந்திருப்பதே: இதன் பெருமையையும் இன்றியமையா உபயோகத்தையும் விளக்கிக்காட்டும். எல்லா ஊரிலும் எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும். எல்லா விடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

**தி. இராஜகோபால் முதலியார்,**
302, தங்கசாலைத் தெருவு, மதராஸ்.



குடியர்களை குணமாக்கும் அற்புத

## "விக்கோரின்"

"விக்கோரினை" எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபினி தின் போருக்கும் தெரியாமல் கொடுத்து வருவதில் குடியையும், அபினையும் ஆயுளுள்ளவும் விட்டு விடுகிறார்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாதம். கடந்த 12 வருஷங்களாக ஏராளமான நற்சாட்சிகள் பெற்றது. பத்தியமே கிடையாது. 12, 18, 25 வருஷக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. தேகத்திற்கு எவ்விதமான கெடுதியும் செய்வதேயில்லை. குடியர்கள் தெரிந்தும் "விக்கோரினை" சாப்பிடலாம்.

40-நாள் "விக்கோரின்" விலை ரூபாய் மூன்று.

ஆங்கிலோ இண்டியன் டிரக்கஸ் கம்பெனி,
கோயமுத்தூர், தென இந்தியா.



இனாம்! இனாம்!!

## ரகஸ்யரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அநுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாசயாளர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயககரால் வெளியிடப்பட்டது.